தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## 1 கிலோ கனகாம்பரம் ரூ.500: வரத்து குறைந்ததால் பூக்கள் விலை உயர்ந்தது

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் பூக்களின் வரத்து குறைந்ததால் விலை அதிகரித்தது. ஒரு கிலோ கனகாம்பரம் ரூ.500க்கு விற்பனையானது.

சென்னை கோயம்பேடு பூ மார்க்கெட்டுக்கு சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளில் இருந்தும் மதுரை, திண்டுக்கல், கோவை உள்பட வெளிமாநிலங்களான ஆந்திரா, கேரளா ஆகிய பகுதிகளில் இருந்து மல்லிகை, முல்லை, கனகாம்பரம், சாமந்தி உள்பட பல்வேறு வகையான பூக்கள் தினமும் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

காலை 4 மணி முதல் 6 மணி வரையிலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையிலும் கோவில் விழாக்கள் மற்றும் பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகளுக்காக அதிகளவில் பூக்கள் விற்பனை நடைபெற்று வருகிறது.

கடந்த வாரம் ஒரு கிலோ மல்லிகை ரூ.170 முதல் 200 வரையிலும், முல்லை (ஒரு கிலோ) ரூ.150க்கும், கனகாம்பரம் ரூ.350 முதல் 400 வரையிலும், மாலைகள் தொடுக்க பயன்படும் சம்பங்கி கிலோ ரூ.20க்கும், பெங்களூரு ரோஜா 20 பூக்கள் கொண்ட ஒரு கொத்து ரூ. 120க்கும் விற்பனையானது.

இந்த நிலையில் கடந்த சில நாள்களாக பூக்களின் விலை கிலோவுக்கு ரூ.10 முதல் 40 வரை விலை உயர்ந்தது. அதற்கேற்றவாறு பூ மாலைகளின் விலையும் இயல்பாக அதிகரித்து விட்டது. குறிப்பாக கடந்த வாரம் கிலோ 400க்கு விற்பனை செய்யப்பட்ட கனகாம்பரம் புதன்கிழமை ரூ.500 வரை விற்பனை செய்யப்பட்டது.

இது இறித்து கோயம்பேடு பூ மார்க்கெட் மொத்த வியாபாரி காஞ்சனா கூறுகையில், முகூர்த்த தினங்கள் மற்றும் கோவில் விழாக்கள் அதிகளவில் இல்லாததால் கடந்த வாரம் வரை பூக்கள் வழக்கமான விலையில் விற்பனையானது.

தற்போது சென்னை மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடிக்கடி மழை பெய்து வருகிறது. இதனால் பூக்களின் விளைச்சகோயம்பேடு மார்க்கெட்டுக்கு வழக்கமாக கொண்டு வரப்படும் பூக்களின் வரத்து பாதியாக குறைந்து விட்டது. மேலும் ஆந்திர மாநிலத்தில் இருந்து கொண்டுவரப்படும் கனகாம்பரம் அதிகளவு கொள்முதல் செய்யப்படுகிறது. வழக்கமாக கொண்டு வரப்படும் கனகாம்பரத்தின் வரத்து பாதியாக குறைந்து விட்டது. இதனால் கனகாம்பரத்தின் விலை எதிர்பார்க்காத அளவிற்கு உயர்ந்து

விட்டது. ரூ.20க்கு விற்கப்பட்ட முழம் பூ தற்போது ரூ. 35 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இனி வரும் நாள்களில் விநாயகர் சதுர்த்தி, விஜய தசமி, சரஸ்வதி பூஜை மற்றும் முகூர்த்த தினங்கள் வரிசையாக வருவதால் பூக்களின் தேவை அதிகமாக இருக்கும். ஆனால் சாகுபடி பரப்பளவு மற்றும் வரத்து குறைந்ததால் பூக்களின் விலை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கான விழிப்புணர்வுக் கூட்டம்

தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் கொசஸ்தலையாறு உபபடுகையில் வேலூர் மாவட்டத்தில் காவேரிப்பாக்கம் பகுதியில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத் திட்டம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த 8 துறைகளின் ஒருங்கிணைந்த கூட்டங்கள் காவேரிப்பாக்கம் பகுதியில் நடத்த திட்டமிடப்பட்டது. அதன்படி, காவேரிப்பாக்கத்தை அடுத்த துரைபெரும்பாக்கம் கிராமத்தில் விழிப்புணர்வுக் கூட்டம் வியாழக்கிழமை நடந்தது.

இக்கூட்டத்துக்கு வேலூர் மாவட்ட பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் எம்.கேசவலு தலைமை தாங்கினார்.

நீர்வள நிலவள திட்டத்தின் செயல்பாடுகள், தற்போது உள்ள நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி விவசாயம் செய்தல், மாற்றுப் பயிர்கள் குறித்த ஆலோசனைகள், தரமான விதைகள், விவசாய இயந்திர பயன்பாடு, கால்நடை சுகாதாரம் குறித்த கருத்துகள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டன. கூட்டத்தில் பொதுப் பணி உதவி செயற்பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர், அதிகாரிகள் நவமணி, பாஸ்கரன், கருணாமூர்த்தி, பிரபாகரன், மருத்துவர் நிவேதிதா, ஆர்.திருஞானவேல், ராகவேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மேலும் பொதுப் பணித் துறை சார்பில் துரைபெரும்பாக்கம் மாதிரிக் கிராமமாகத் தேர்வு செய்யப்பட்டது.

## சின்ன வெங்காயம் பயிரிடும் விவசாயிகள் முறையான சாகுபடி முறைகளைக் கையாள வேண்டும்

ராசிபுரம் பகுதியில் சின்ன வெங்காயம் பயிரிடும் விவசாயிகள் முறையான சாகுபடி முறைகளைக் கையாண்டால் அதிக மகசூல் பெறலாம் என தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ராசிபுரம் வட்டாரத்துக்கு உள்பட்ட பகுதிகளில் கடந்த சில வாரங்களாக ஆங்காங்கே மழை பெய்துள்ளது. இதனால், விவசாயிகள் சின்ன வெங்காயம் பயிரிட்டு வருகின்றனர். சின்ன வெங்காயம் நடவு செய்திட ஏக்கருக்கு 1 கிலோ கோ 5, விதை தேவைப்படும். வளர்ச்சிக்கு ஏற்றவாறு 35 நாளில் இருந்து 40 நாள்களுக்குள் நாற்றுகளை பறித்து நடவு செய்யலாம்.

தேவைக்கேற்றவாறு நீளம், 1 மீட்டர் அகலம், 15 செ.மீ உயரமும் உடைய மேட்டுப்பாத்தியை அமைத்து வெங்காயம் நடவு செய்ய வேண்டும். தொழு எருவை 2.5 சென்ட் நிலத்துக்கு 150 கிலோ வீதம் இட வேண்டும். ஒரு கிலோ வெங்காய விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி, சூடோமோனோஸ், பாஸ்போ பாக்டீரியா, அசோஸ்பைரில்லம் தலா 4 கிராம் அளவில் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதைகளை வரிசையாக 2.5 செ.மீ. இடைவெளியில், 2 செ.மீ. ஆழத்தில் கோடு கிழித்து விதைத்து மணல் கொண்டு விதைகளை மூட வேண்டும். மண்ணின் மேற்பரப்பு நன்கு நனையும் வரை தண்ணீர் தெளிக்க வேண்டும். விதை முளைத்து வரும் வரை காய்ந்த வைக்கோலைக் கொண்டு மூடி வைக்க வேண்டும். நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். நாற்றுகள் அழுகுவதைத் தடுக்க லிட்டருக்கு 2 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு கலந்த கலவையைக் கொண்டு நாற்றங்காலை நனைக்க வேண்டும்.

நாற்றுகள் நுனி கருகி அல்லது மஞ்சள் நிறமாக இருந்தால் 25-ஆவது நாளில் இருந்து டிஏபி., 1 சதமும், ஒட்டுப்பசை அரை மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். நாற்றுகளை பிடுங்கி 6 மணி நேரத்துக்குள் நடவு செய்ய வேண்டும். மேற்குறிப்பிட்ட சாகுபடி பணிகளை மேற்கொண்டால் அதிகளவில் மகசூல் பெறலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பயிர் வளர்ச்சிக்கு உதவும் பஞ்சகவ்யம்

இயற்கை வேளாண் முறையில் பயிர் வளர்ச்சிக்கு பஞ்சகவ்யம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

கிருஷ்ணகிரி அருகே வேளாண்மை மற்றும் தோட்டக்கலை மாணவிகள் பஞ்சகவ்யம் என்னும் வளர்ச்சி ஊக்கி கரைசலின் பயன்பாடு, அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு புதன்கிழமை செய்முறை விளக்கம் அளித்தனர்.

கிருஷ்ணகிரியை அடுத்துள்ள கே.பூசாரிப்பட்டியில் உள்ள விவசாயி மணியின் நிலத்தில், ஆதிபராசக்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை மாணவிகள் சாந்தி, வினோதினி,

புனிதா, நந்தினி, மகாலட்சுமி, புவனேஸ்வரி ஆகியோர், பஞ்சகவ்யம் என்னும் வளர்ச்சி ஊக்கி கரைசலை விவசாயிகளுக்கு செய்து காட்டினர்.

பின்னர் அதன் நன்மைகள் குறித்து அவர்கள் கூறியது:

பஞ்சகவ்யம் என்பது மாட்டுச் சாணம், மாட்டு சிறுநீர், பால், தயிர், வெல்லம், நெய், வாழைப்பழம், இளநீர் மற்றும் தண்ணீர் ஆகியவற்றை கொண்டு தயாரிக்கும் கரைசலாகும்.

இந்தக் கரைசலை அனைத்து வகையான வேளாண் பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். பஞ்சகவ்ய கரைசல் இயற்கை வேளாண் முறை சாகுபடியில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இது செடியின் வளர்ச்சியை உயர்த்துகிறது. மேலும், பயிர்களுக்கு நோய் பற்றா நிலையை கொடுக்கும். அத்துடன் இந்தக் கரைசல் பயிர்களின் பூக்கள் உருவாவதற்குத் தூண்டப்படுகிறது.

இதைப் பயன்படுத்துவதால், பழச்செடிகள் ஆண்டு முழுவதும் பூக்கள் பூத்துக்கொண்டே இருக்கும். பழங்கள் நல்ல மணத்துடனும், சதையுடனும் இருக்கும். மேலும், மகசூல் அதிகரிக்கும்.

விதை, நாற்றுகள் நேர்த்தி செய்வதற்கும் இது பயன்படுகிறது. இந்தக் கரைசலை பயிர்களின் அனைத்து வளர்ச்சிப் பருவங்களிலும் தெளிக்கலாம் என்றனர் அவர்கள்.

## துவரையில் அதிக லாபம் பெற புதிய தொழில்நுட்பம்

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் துவரை சாகுபடியில் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் அதிக லாபம் பெறலாம்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பயறுவகை பயிர்களின் உற்பத்தியை அதிகப்படுத்த புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே துவரையை நாற்றாங்கால் முறையில் சாகுபடி செய்யும் தொழில் நுட்பமாகும்.

இத்திட்டத்தில் ரூ. 7,500 மதிப்பில் வேளாண் இடுபொருள்கள் மானியமாக வழங்கப்படுகின்றன. ஹெக்டேருக்கு 2.5 கிலோ விதை போதுமானதாகும்.

2.5 கிலோ விதைகளை 2 சத கால்சியம் குளோரைடு கரைசலில் ஒரு மணி நேரம் ஊறவைத்து, அதை 7 மணி நேரம் உலர்த்தி, 100 கிராம் ரைசோபியம், 100 கிராம் பாஸ்போபாக்டீரியா, 10 கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும்.

6க்கு 4 அங்குலம் அளவுள்ள பாலித்தீன் பைகளில் செம்மண், மணல், குப்பை கலந்த கலவையை நிரப்பி, ஒரு பைக்கு 2 விதைகள் வரை ஊன்ற வேண்டும். பைகளில் நீர் தேங்காமல் இருக்க 2-லிருந்து 3 துளைகள் போடலாம்.

ஹெக்டேருக்கு (6,050) பைகள் தயார் செய்து, நிழற்பாங்கான இடங்களில் வைத்து தேவையான தருணங்களில் பூவாளியின் மூலம் நீர் ஊற்றி, நாற்று தயார் செய்ய வேண்டும். 25 -லிருந்து 30 நாள்கள் வயதுடைய நாற்றுகளை நடவு செய்யலாம்.

முதல் மழையைப் பயன்படுத்தி நடவு வயலைத் தயார் செய்து கொள்ள வேண்டும். நன்றாக உழவு செய்த வயலில் 30 நாள் ஆன நாற்றுகளை, மழை பெய்தவுடன் வரிசைக்கு வரிசை 6 அடி செடிக்கு 3 அடி என்ற இடைவெளியில் நடவுக்கு 6 அங்குலம் குழி எடுத்து பைகளிலுள்ள 2 நாற்றுகளை, மழை பெய்த மாலை வேளையில் நட வேண்டும்.

செடி வளர்ந்தவுடன் இரண்டில் ஒன்றைக் களைந்துவிட வேண்டும். நடவு செய்த 20 முதல் 30 நாள்களுக்குள், செடியின் நுனியை ஒரு அங்குலம் கிள்ளியெடுக்க வேண்டும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகமும், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் கடைப்பிடித்து துவரைச் சாகுபடியில அதிக லாபம் பெறலாம்.

அதிக மகசூல் திறனைப் பெறுவதற்கு, சொட்டு நீர் பாசன முறையில் நீரில் கரையும் உரங்களைப் பரிந்துரையின் அடிப்படையில் இட வேண்டும்.

துவரை நாற்று விட்டு நடவு செய்வதன் மூலம், பயிர் எண்ணிக்கை முழுமையாக பராமரிக்கப்படுகிறது.

மேலும், ஒரு மாத காலம் பயிர் வயலில் இருப்பது குறைவதோடு, 3,750 கிலோ வரை ஹெக்டேருக்கு மகசூல் பெறலாம். மேலும் விவரங்களுக்கு பெரம்பலூர் வேளாண் உதவி இயக்குநர் (9047072766), வேப்பூர் வேளாண் உதவி இயக்குநர் (9047072763), ஆலத்தூர் (9047072764), வேப்பந்தட்டை (9047072768) ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம்

## 2013-14-ல் கூட்டுறவு வங்கி மூலம் ரூ.4,500 கோடி பயிர்க் கடன்

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகள் மூலம் 2013-14 ஆம் ஆண்டுக்கு ரூ.4,500 கோடிக்கு பயிர்க் கடன் வழங்கப்படும் என கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜு தெரிவித்தார்.

கூட்டுறவுத் துறை திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காக திருநெல்வேலிக்கு புதன்கிழமை வந்த அவர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் செய்தியாளர்களிடம் கூறியது:

இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. குறிப்பாக கூட்டுறவுத் துறை சிறப்பிடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவில் 93,413 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளன. ஆனால், தமிழகத்தில் உள்ள தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்தான் நிகழாண்டு முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவில் மாவட்ட அளவிலான கூட்டுறவு வங்கிகள் 307 உள்ளன. இதில், திருச்சி மாவட்ட கூட்டுறவு வங்கி முதலிடம் பிடித்துள்ளது. இந்தியாவில் மாநிலக் கூட்டுறவு வங்கிகள் 37 உள்ளன. இதில், தமிழகத்துக்குத்தான் நிகழாண்டு 2 பரிசுகள் கிடைத்துள்ளன.

மேலும், சிறப்பு பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக சிறு, குறு விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கும் இலக்கு ஆண்டுதோறும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கடனுக்கான 7 சதவீத வட்டியை அரசே மானியமாக செலுத்துகிறது.

இதன்படி, 2011-12-ம் நிதியாண்டு ரூ. 3 ஆயிரம் கோடி வழங்க முடிவு செய்யப்பட்டு ரூ.3,284 கோடி வழங்கப்பட்டது. 2013-14 -ம் ஆண்டு ரூ.3,500 கோடி வழங்க முடிவு செய்யப்பட்டு ரூ.4,084 கோடி வழங்கப்பட்டது. 2013-14 -ம் ஆண்டுக்கு ரூ.4,500 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2ஆவது பசுமைப் புரட்சிக்கு தமிழக அரசு அடித்தளமிட்டுள்ளது.

விலைவாசி உயர்வால் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக கூட்டுறவு மூலம் சிறப்புத் திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா செயல்படுத்தி வருகிறார்.

1.85 கோடி குடும்ப அட்டைகளுக்கு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது. நடுத்தர மக்களுக்காக ரூ.20-க்கு ஒரு கிலோ தரமான அரிசி வழங்கப்படுகிறது. மாநகராட்சிகளில் மலிவு விலையில் உணவு வழங்க அம்மா உணவகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

சென்னையில் காய்கறி விற்பனையும் தொடங்கப்பட்டுள்ளது. ரூ.20-க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் கடைகளை மேலும் பல இடங்களில் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலம்பட்டி, புளியங்குடி, சுரண்டை, செங்கோட்டையிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி, ஆழ்வார்திருநகரியிலும் கடைகள் தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறு, குறு விவசாயிகள் தங்களது உற்பத்தி பொருள்களை சேமித்துவைத்து நல்ல விலை கிடைக்கும் தருணங்களில் விற்பனை செய்ய ஏற்கெனவே கடந்த ஆண்டு 2,270 கிடங்குகள் அமைக்க உத்தரவிடப்பட்டது.

இப்போது, புதிதாக 1,044 கிடங்குகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது. இதில், திருநெல்வேலி மாவட்டத்துக்கு 32 கிடங்குகளும், தூத்துக்குடி மாவட்டத்துக்கு 14 கிடங்குகளும், கன்னியாகுமரியில் ஒரு கிடங்கும் கட்டப்படும்.

திட்டப் பணிகளை மேலும் வலுப்படுத்தவும், விரைவுப்படுத்தவும் நவீனமயமாக்கும் பணிகள், கணினிமயமாக்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன என்றார் அவர்.

## கரும்புக்கு ஆதரவு விலையை நிர்ணயிக்க வலியுறுத்தல்

கர்நாடக அரசு கரும்புக்கு ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று, விவசாய சங்கம் மற்றும் பசுமை சேனைத் தலைவருமான கோடிஹள்ளி சந்திரசேகர் வலியுறுத்தினார்.

இதுகுறித்து புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கர்நாடகத்தில் கரும்பு அறுவடை தொடங்க உள்ள நிலையில், கரும்புக்கு இதுவரை ஆதரவு விலையை அரசு நிர்ணயிக்கவில்லை.

இதனால், கரும்பு விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு டன்னுக்கு ரூ.2,400 விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்து வருகின்றனர்.

இதனால், கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு உடனடியாக கரும்புக்கு ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும்.

டன் கரும்புக்கு குறைந்தபட்சம் ரூ. 3,500 ஆதரவு விலை நிர்ணயிக்க வேண்டும். இந்த ஆதரவு விலையை அரசு அறிவிக்காவிட்டால், மாநிலம் தழுவிய போராட்டம் நடத்தப்படும் என்றார் அவர்.

தினமலர்
உண்மையின் உரைகல்
நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்

## கோவையில் "ஆந்த்ராக்ஸ்' பாதிப்பு இல்லை கால்நடை பராமரிப்பு துறை திட்டவட்டம்

கோவை:"கால்நடைகளை தாக்கும் "ஆந்த்ராக்ஸ்' பாதிப்பு, கோவை மாவட்டத்தில் இல்லை' என, கால்நடை பராமரிப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலுகா, நொளம்பூர் கிராமத்தில், கடந்த 28ம் தேதி தேதி முதல், தொடர்ச்சியாக மாடுகள் இறந்தன. கால்நடைத் துறை மருத்துவக் குழுவினர் ஆய்வு செய்ததில், ஆந்த்ராக்ஸ் நோய் பாதிப்பு இருந்தது தெரிந்தது. கோவை மாவட்டத்தில், "ஆந்த்ராக்ஸ்' பாதிப்பு இல்லாத நிலையிலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் முத்துகோபாலகிருஷ்ணன், சிறப்பு நிபுணர் பெருமாள் சாமி ஆகியோர் கூறியதாவது:

காரமடை, அன்னூர், பெரிய நாயக்கன்பாளையம், தொண்டாமுத்தூர், மதுக்கரை, சூலூர், சுல்தான்பேட், எஸ்.எஸ்., குளம், பொள்ளாச்சி வடக்கு - தெற்கு, ஆனைமலை, கிணத்துக்கடவு என, 12 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, கால்நடைகள் பராமரிப்பு முகாம், சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன், அன்னூர், காரமடை, தொண்டாமுத்தூர், மதுக்கரை பகுதிகளில், சில கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் பாதிப்பு இருந்தது, ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கப் பட்டது. உடனடியாக அங்கு முகாமிட்டு, நோய் பரவாமல் தடுக்கப்பட்டு, கால்நடைகள் பாதிக்கப்படாமல் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது, இப்பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு, ஓராண்டுக்கு ஒரு முறை என ஐந்து ஆண்டுகளுக்கு, நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

கோவை மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு, "ஆந்த்ராக்ஸ்' பாதிப்பு இல்லை. இருப்பினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டு 180 சிறப்பு முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது;

இதுவரை 45 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டன. இவ்வாறு, முத்துகோபாலகிருஷ்ணன், பெருமாள் சாமி கூறினர்.

### கருகும் கறிவேப்பிலை விவசாயம் சோகத்தில் விவசாயிகள்

மேட்டுப்பாளையம்: பருவமழை பொய்த்ததால், காரமடை பகுதியில் 500க்கும் மேற்பட்ட ஏக்கரில், பயிர் செய்துள்ள கறிவேப்பிலை, தண்ணீர் இல்லாமல் கருகி வருகிறது.

மேட்டுப்பாளையம் அருகே உள்ள காரமடை ஒன்றியத்தில் உள்ள தேரம்பாளையம், காரமடை, தோலம்பாளையம், பெள்ளாதி, மருதூர், திம்மம்பாளையம், கிட்டாம்பாளையம், புஜங்கனூர் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் கறிவேப்பிலை விவசாயம் செய்துள்ளனர். ஒருமுறை அறுவடை செய்த பின்பு, குறைவான தண்ணீர் பாசனம் மூலம், மூன்று மாதத்தில் மீண்டும் அறுவடை செய்யலாம். தொழு உரம் போட்டு நன்கு பராமரித்தால் ஒரு ஏக்கரில், மூன்றிலிருந்து ஐந்து டன் இலை கிடைக்கும். சீசன் காலத்தில் ஒரு கிலோ இலை ஐந்து ரூபாய்க்கும், சீசன் இல்லாத காலத்தில் 10லிருந்து 15 ரூபாய் வரையும் விற்பதால், கிணற்றில் தண்ணீர் குறைவாக இருந்தாலும், பெரும்பாலான விவசாயிகள் கறிவேப்பிலை விவசாயம் செய்து வருகின்றனர்.
கடந்த இரண்டு ஆண்டாக மேட்டுப்பாளையம் பகுதியில் சரியான முறையில் பருவமழை பெய்யாததால், கிணறு மற்றும் போர்வெலில் தண்ணீர் வற்றி விட்டது. இதனால், காரமடை ஒன்றிய பகுதியில் 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிர் செய்துள்ள கறிவேப்பிலை, தண்ணீர் இல்லாமல் கருகி வருகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஆயிரக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தேரம்பாளையத்தை சேர்ந்த வியாபாரி ராஜ்குமார் கூறியதாவது: காரமடை ஒன்றியத்தில் தினமும் 40 டன் கறிவேப்பிலை வெட்டப்படுகிறது. இப்பகுதியில் விளையும் இந்த இலைக்கு நல்ல மனமும், ருசியும் உள்ளதால், மக்கள் அதிகம் விரும்பி வாங்குகின்றனர். இங்கிருந்து தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளா மாநிலத்துக்கும் லாரியில்

மூலம் அனுப்பப்படுகிறது. துபாய் உட்பட பல வெளிநாடுகளுக்கு விமானம் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தண்ணீர் இல்லாததால், மகசூல் பாதியாக குறைந்து விட்டது. தற்போது ஒரு கிலோ 20 லிருந்து 23 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது.

தண்ணீர் உள்ள விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. ஆனால் தண்ணீர் இல்லாமல் பாதிக்கும் மேற்பட்ட இடங்களில் கருகி வருவதால், அந்த விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

தற்போதுள்ள இலையை வெட்டினால், அடிக்கட்டை காய்ந்து விடும்; அதன் பிறகு புதிதாக நாற்று நட வேண்டும். அதனால், காய்ந்து வரும் இலைகளை விவசாயிகள் வெட்டாமல் அப்படியே விட்டு விட்டனர். வரும் காலத்தில் மழை பெய்யவில்லை என்றால், இன்னும் ஆறு மாதங்களில் கறிவேப்பிலை விவசாயம் முற்றிலும் அழிந்து விடுமோ என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது," என்றார்.

### ஆனைமலை புலிகள் காப்பகத்தில் மூங்கில் நாற்று நடவுப்பணி தீவிரம்

உடுமலை:ஆனைமலை புலிகள் காப்பகப்பகுதியில், வனவிலங்குகளின் உணவுத்தேவைக்காக மூங்கில்நாற்றுகள் நடவு செய்யும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. ஆனைமலை புலிகள் காப்பகம் உடுமலை, அமராவதி வனச்சரகத்தில், 447.84 சதுர கி.மீ., வனப்பரப்புஉள்ளது.வனப்பகுதியில்,வேலிக்கருவைபோன்றகளைச்செடிகள் ஆக்கிரமிப்பு காரணமாக, விலங்குகளுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இருந்தது. இதனையடுத்து,வனப்பகுதியில்விலங்குகளின்உணவுத்தேவைக்கு பயன்படும், மூங்கில், புளி உட்பட பல்வேறு புல்வகைகளை பயிரிட வனத்துறையினர்திட்டமிட்டனர். இதற்காக, இரு வனச்சரகங்களிலும் நாற்றுப்பண்ணைகள் அமைக்கப்பட்டன. ஆனால், கடந்த ஒராண்டாக வனப்பகுதியில் பருவமழை பெய்யாமல் கடும் வறட்சி நிலவியது. இதனால், புதிய நாற்றுகளை நடவு செய்வதில் பிரச்னை ஏற்பட்டது. மழைக்காகவனத்துறையினர்காத்திருந்தனர்.

கடந்த சில நாட்களாக அமராவதி வனச்சரக பகுதியில், மழை பெய்து வருகிறது. இதை

பயன்படுத்தி பல்வேறு வகையான நாற்றுகளை நடவு செய்யும் பணிகளை வனத்துறையினர்தீவிரப்படுத்தியுள்ளனர்.

அமராவதி வனச்சரகத்தில், 20 எக்டர் பரப்பில் வேலிக்கருவை மரங்களை அகற்றி, மூங்கில் மற்றும் புல்வகைகள் நடும் பணிகளை மாவட்ட வன அலுவலர் தன்ராஜ், வனச்சரக அலுவலர் மாரியப்பன் ஆகியோர் துவக்கி வைத்தனர். முதற்கட்டமாக, அமராவதி அணைப்பகுதியில் மூங்கில் நாற்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பின்னர், நாற்றுப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து வகை நாற்றுகளும் வனப்பகுதியில் நடவு செய்ய வனத்துறையினர் திட்டமிட்டு உள்ளனர்.

## மூங்கில் சாகுபடியை ஊக்குவிக்க மானியம் தோட்டக்கலைத்துறை தகவல்

உடுமலை:உடுமலை பகுதி விவசாயிகளுக்கு தேசிய மூங்கில் இயக்ககம் சார்பில், முள் இல்லா மூங்கில் சாகுபடியை ஊக்குவிக்க மானியத்திட்டங்கள் வழங்கப்படுகிறது. உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் இளங்கோ அறிக்கை: உடுமலை பகுதி விவசாயிகளுக்கு தேசிய மூங்கில் இயக்ககம் சார்பில், மானிய உதவிகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டருக்கு 8 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இயற்கை வேளாண் உத்தி அடிப்படையில், சாகுபடியில், மூங்கில் காற்றுத் தடுப்பானாக செயல்படுகிறது. கீழே விழும் மூங்கில் இலைகள் மண் தன்மை, நீர் பிடிப்புத்திறன் அதிகரிக்கும். விவசாயிகள் தங்களது சொந்த செலவில், கன்றுகளை நட்டு, அதன் புகைப்படம், சிட்டா, அடங்கல், ரேஷன்கார்டு மற்றும் விண்ணப்பம் தந்து மூங்கில் மானியம் பெற வாய்ப்புள்ளது. மூன்றாம் ஆண்டு முதல் 60 ஆண்டுகள் வரை தரமான மூங்கிலை அறுவடை செய்யலாம். மேலும், விவரங்களுக்கு 98420-07125 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

புதுச்சேரி:கால்நடைத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பு ஊசி முகாம் நேற்று துவங்கியது. அரியாங்குப்பம், சிவராந்தகம் கால்நடைமருந்தகத்தில் நேற்றுதுவங்கிய கோமாரி நோய் தடுப்பூசி முகாம், வரும் 6ம் தேதி வரை நடக்கிறது. வரும் 10ம் தேதி முதல் 13 தேதி வரை  வில்லி யனூர், தட்டாஞ்சாவடி கால்நடை மருந்தகத்திலும், 19ம் தேதி முதல் 24ம் தேதி வரை திருக்கனூர், கரியமாணிக்கம் பகுதியிலும், 25ம் தேதி முதல் அக்டோபர் 1ம் தேதி வரை பாகூர் பகுதியிலும்,25ம் தேதி முதல் 27ம் தேதி வரை மதகடிப்பட்டு பகுதியிலும், 25ம் தேதி முதல் 30ம் தேதி வரை புதுச்சேரி பகுதியிலும் காலை 6:00 மணி முதல் 10:00 வரை கோமாரி நோய் தடுப்பு ஊசி போடப்படுகிறது.கால்நடை உரிமையாளர்கள், தங்கள் கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து பாதுகாத்து கொள்ள, கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் பத்மநாபன் கேட்டு கொண்டுள்ளார்.

## கறவை பசுக்கள் பெற கிராம சபாவில் விண்ணப்பிக்கலாம்

விழுப்புரம்:இலவச கறவை பசுக்கள் பெற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் விண்ணப்பிக்கலாம்எனகலெக்டர்சம்பத்தெரிவித்துள்ளார்.அவர்விடுத்துள்ளசெய்திக்குறிப்பு:தமிழக அரசின் இலவச கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தில் பயனடைய விரும்புவோர், ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபை கூட்டத்தில் விண்ணப்பங்களை பெறலாம்.

கால்நடை உதவி மருத்துவம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கிராம அளவிலான கமிட்டி உறுப்பினர்களுடன் கூட்டம் நடத்தி, தகுதியான பயனாளிகளை தேர்வுசெய்து,பெயர்களைபட்டியலிடவேண்டும்.தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலை வி.ஏ.ஓ.,க்களிடம் அளித்து, பயனாளிகளின் நிலமற்ற தன்மை மற்றும் ஜாதியையும் சரி பார்க்க வேண்டும். தேர்வு செய்த பட்டியலை கிராம கமிட்டி ஒப்புதலுடன் கிராம சபாவில் தீர்மானமாக அங்கீகரிக்க வேண்டும். பயனாளிகளுக்கு கறவை பசுக்கள் தேர்வு செய்யும் முறை, பராமரிப்பது குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தை ஏழைகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி லயன்ஸ் சங்கம் சார்பில் அ.பனப்பாக்கத்தில் இலவச கால்நடைமருத்துவமுகாம்நடந்தது.சங்க தலைவர் செல்வம் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் கமலக்கண்ணன் முன்னிலை வகித்தார். செயலாளர் சுகுமார் வரவேற்றார். முகாமை மண்டல தலைவர் ராஜாராமன் துவக்கி வைத்தார். பனப்பாக்கம் மற்றும் சுற்றுப்புற கிராமத்தை சேர்ந்த 200 பசு மாடுகள் , 150 ஆடுகளுக்கு டாக்டர் கீர்த்தி சிகிச்சை அளித்தார். வட்டாரத் தலைவர் மணி வண்ணன், பொரு ளாளர் ஜெயச்சந்திரன், மாவட்ட தலைவர் முருகன், முதல் உதவி தலைவர் அஷரப் உசேன், திலகர், கால் நடை ஆய்வாளர்அரிச்சந்திரன், உதவியாளர் மணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சின்னசேலம் பகுதியில் மக்காசோள பயிர் செழிப்பு

சின்னசேலம்:சின்னசேலம் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் மக்கா சோளம் செழித்து வளர்ந்துள்ளது. சின்னசேலம் தாலுகாவில் பூண்டி, அம்மையகரம், சிறுவத்தூர், ராயர்பாளையம், பாண்டியங்குப்பம் உள்ளிட்ட கிராமங்களில் 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் மக்காசோளம் பயிரிடப்பட்டுள்ளது. கடந்தாண்டு பருவமழை பொய்த்து போனதால் கிணற்று நீரை பயன்படுத்தி மக்காசோளம் பயிரிட்டனர். பயிர் செய்ததில் இருந்து பருவ மழை வராததால் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டது. சின்னசேலம் பகுதியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால் மக்கா சோள பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளது. விவசாயிகள் உரம் வைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## கெலவரப்பள்ளி அணை நீர் திறப்பு வெள்ள அபாய எச்சரிக்கை

ஓசூர்: கர்நாடகா மாநிலத்தில் பெய்து வரும் தொடர் மழையால், ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு ஆயிரம் கன அடிநீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளதால், கரையோர பகுதியில் வெள்ள அபாய எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. கர்நாடகா மாநிலம், பெங்களூரு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர் கன மழை பெய்து வருகிறது. இதனால், ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளியில் தென்பெண்ணை

ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. அணைக்கு நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு, 1,700 கன அடிநீர் வந்தது. அணையின் மொத்த நீர்மட்டம் 44.4 அடியாகும். தொடர்ந்து அணைக்கு நீர் வரத்து இருந்ததால், அணையின் நீர்மட்டம், 44 அடியை தொட்டது. அணையின் பாதுகாப்பு கருதியும், அணைக்கு நீர் வரத்து காரணமாக நேற்று காலை கெலவரப்பள்ளி அணையில் இருந்து தென்பெண்ணை ஆற்றில் வினாடிக்கு, ஆயிரம் கன அடிநீர் திறந்து விடப்பட்டது. இதனால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தொரப்பள்ளி தரைப்பாலத்துக்கு மேல் தண்ணீர் செல்வதால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பள்ளி செல்லும் மாணவ மாணவிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த விளைபொருட்களை சந்தைக்கு எடுத்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட நீர் இன்று (செப்.,5) கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக கே.ஆர்.பி., அணையும் நிரம்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கர்நாடகா மாநிலத்தில் தொடர்ந்து கன மழை பெய்து வருவதால், கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து அதிகமாகும் என்பதாலும் அணையில் இருந்து ஆயிரம் கன அடிக்கு மேல் தண்ணீர் திறந்து விடவாய்ப்புள்ளதாலும் தென்பெண்ணை ஆற்றங்கரையோர கிராமங்களுக்கு வருவாய் துறையினர் வெள்ள அபாய எச்சரிக்கை செய்துள்ளனர்.

## திருந்திய நெல் சாகுபடியால் அதிக விளைச்சல்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதிக விளைச்சல் தருவதால் திருந்திய நெல் சாகுபடி செய்யும் பரப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பயிரிடப்படும் உணவு தானியப்பயிர்களில் நெல் மிக முக்கியமானதாகும். 25,700 ஹெக்டேர் இயல்பான பரப்பில் பயிரிடப்பட்டு ஒரு லட்சத்து, 53 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. ஹெக்டேர் ஒன்றுக்கு, 6,100 கிலோ சராசரி மகசூல் பெறப்படுகிறது. மகசூலை பெருக்க கடந்த, 2009ம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சாதாரண நெல் சாகுபடியில் ஒரு ஏக்கரில் நெல் நடவு செய்ய, 25 கிலோ விதை தேவைப்படும். ஆனால், திருந்திய நெல் சாகுபடி முறையில் ஒரு ஏக்கருக்கு, 2 கிலோ விதை போதுமானதாகும். சாதாரண நெல்

சாகுபடி முறையில் ஏக்கருக்கு சராசரியாக, 1,950 கிலோ நெல் மகசூல் கிடைக்கும். அதிக பட்சமாக, 2 ஆயிரத்து, 650 கிலோ நெல் மகசூல் கிடைக்கும். திருந்திய நெல் சாகுபடி முறையில் ஏக்கருக்கு சராசரியாக, 3 ஆயிரத்து 560 கிலோ மகசூல் கிடைக்கும். அதிக பட்சமாக ஏக்கருக்கு, 5 ஆயிரத்து, 250 கிலோ நெல் மகசூல் எடுக்க முடியும். மகசூல் அதிகம் காரணமாக விவசாயிகளுக்கு சராசரியாக ஒரு போகத்துக்கு ஏக்கருக்கு, 64 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். அதிக பட்சமாக, 94 ஆயிரத்து, 500 ரூபாய் வரை விவசாயிகள் லாபம் பார்க்க முடியும். இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறைக்கு மாறி வருகின்றனர். திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை மேலும் பரவலாக்க கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் துறை பல்வேறு செயல் விளக்கங்கள், பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகிறது. திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பம், 15,600 ஹெக்டேரில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் கடந்த கார் மற்றும் முன் சம்பா பருவத்தில் இது வரை, 7 ஆயிரத்து 200 ஹெக்டேர் கூடுதலாக இந்த தொழில் நுட்பம் கடைபிடிக்கப்பட்டுள்ளது. வரும் நவரை பட்டத்தில் கூடுதலாக, 11,650 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையை கடைபிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண் துறை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் கூறியது:

சாதாரண நெல் சாகுபடி முறையை காட்டிலும் திருந்திய நெல் சாகுபடி செய்ய செலவு குறைவாகும். ஆனால், லாபம் அதிகமாகவும். திருந்திய நெல் சாகுபடி முறையில் ஹெக்டேருக்கு ஏழு கிலோ விதை, மேட்டுப்பாத்தி நாற்றங்காளில் நாற்று உற்பத்தி, இள வயது நாற்று நடவு மேற்கொள்ளுதல், குத்துக்கு ஒரு நாற்று நடவு செய்தல், வயலில் சதுர முறையில் நடவு மேற்கொள்ளுதல், கோனோ வீடர் கருவி மூலம் களை எடுத்தல், காய்ச்சலும், பாய்ச்சலுலமாக நீர்பாசனம் மேற்கொள்ளல், இலை வண்ண அட்டை பயன்படுத்தி தழை சத்து உரமிடல் போன்ற சாகுபடி தொழில் நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்தினால் கூடுதல் லாபம் கிடைக்கும். திருந்திய நெல் சாகுபடிக்கு குறைந்த அளவே தண்ணீர் செலவாகும் என்பதால் இனி வருங்காலங்களில் அனைத்து விவசாயிகளும் திருந்திய நெல் சாகுபடி முறைக்கு மாற வேண்டும்.இவ்வாறு தெரிவித்தார்.

## தேயிலை தோட்டங்களில் உரமிட விவசாயிகள் ஆர்வம்

கோத்தகிரி:கோத்தகிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக, மழைப் பெய்-துவருவதால், விவசாயிகள் தேயிலை தோட்டங்களில் உரமிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கோத்தகிரி மற்றும் சுற்றுவட்டார பகுதியில், கடந்த சில நாட்களாக, நல்ல மழைப் பெய்து வருகிறது. இதனால், வாடிய தேயிலை செடிகளில் அரும்புகள் துளிர்விட துவங்கியுள்ளது. விவசாய நிலங்களில் ஓரளவு ஈரப்பதம் காணப்படுவதால், விவசாயிகள் உரமிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கிராமங்களில் இயங்கிவரும் சிறுதேயிலை விவசாயிகள் கொள்முதல் சங்கங்கள், தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் தனியார் தேயிலை ஏஜென்ட்கள் மூலம் உரம் வினியோகிக்கப்பட்டு வருகிறது. பசுந்தேயிலைக்கு 18 ரூபாய்க்கும் குறையாமல் விலை கிடைத்துவருவதால், விவசாயிகள் தோட்டங்களுக்கு உரமிட்டு, பராமரிப்பு பணியில் ஈடுப்பட்டுள்ளனர்.

கோத்தகிரி நெடுகுளா, வ.உ.சி.,நகர், எரிசிபெட்டா, மிளிதேன், கேர்கம்பை மற்றும் சுள்ளிக்கூடு பகுதிகளில், காரட், பீன்ஸ், முட்டைகோஸ் மற்றும் உருளைக்கிழங்கு உளளிட்ட மலைக்காய்கறி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள முக்கிய நீரோடைகள் தூர்வாரப்படாத காரணத்தால், மலைச்சரிவுகளில் இருந்து ஓடும் தண்ணீரால், தாழ்வான பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, காய்கறி பயிர்கள் சேதம் அடைவதை தடுக்க, விரைவில் ஓடைகள் தூர்வாரப்படுவது அவசியம்.

## வேளாண் குழுக்களுக்கு இயந்திரங்கள் வழங்கல்

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் வேளாண் குழுக்களுக்கு ரூ.11.69 லட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் முழு மானியத்தில் வழங்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பயிர் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விதமாக விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறையின் சார்பில் நவீன இயந்திரங்கள் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 4 வேளாண் குழுக்களுக்கு 11 லட்சத்து 69 ஆயிரம் பெறுமதியான களை எடுக்கும் இயந்திரம், நாற்று நடவு இயந்திரம், விசை உழவு இயந்திரம் ஆகியவை முழு மானியத்தில் வழங்கப்பட்டது.

இவற்றை வேளாண் குழுவைச் சேர்ந்த கனகராஜ், முருகேசன், ராஜகோபால், அப்துல் முத்தலிப் ஆகியோரிடம் மாவட்ட கலெக்டர் மனோகரன் வழங்கினார். கலெக்டர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அறிவழகன், உதவி செயற்பொறியாளர்கள் சிதம்பரம், ஜாண்ஜோசப் உட்பட அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

## தொடர் மழை பொழிவால் விவசாயப்பணிகள்...துவக்கம் அணைகளுக்கு நீர்வரத்தால் விவசாயிகள் மகிழ்ச்சி

பழநி : மாவட்டத்தில் பரவலான மழை மற்றும் அணைகளுக்கு நீர்வரத்து காரணமாக :

விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நடவு பணிக்கு நிலத்தை தயார் செய்யும் வகையில் உழவுப்பணியை துவக்கியுள்ளனர். மாவட்டத்தில் போதிய மழையில்லாமல் : ஏராளமான விவசாயிகள் ஆடிமாத நடவுப்பணிகளை மேற்கொள்ளவில்லை. மழையை எதிர்பார்த்து நடவுப்பணிகளை மேற்கொண்டவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. இந்நிலையில்,கொடைக்கானல் :

பழநி பகுதிகளில் பரவலாக மழைபெய்ந்துள்ளதையடுத்து : அணைகளுக்கு நீர்வரத்துவங்கியது. பழநி சுற்றுப்புறக் கிராமங்களில் சுமார் 5,500 ஹெக்டர் பரப்பளவில் சாம்பா நெல் சாகுபடி ஆண்டுதோறும் செய்யப்படுகிறது. நெய்க்காரப்பட்டி :

பாலசமுத்திம் : சட்டப்பாறை மஞ்சநாயக்கன்பட்டி : கணக்கன்பட்டி ஆகிய பகுதி விவசாயிகள் : நிலத்தில் பரம்படித்து : உழவுப்பணிகளை துவங்கியுள்ளனர். * ரெட்டியார்சத்திரம் பகுதியில் பெய்த மழை காரணமாக கதிரையன்குளம் : சில்வார்பட்டி : அழகுபட்டி : கே.புதுக்கோட்டை : பலக்கனூத்து : செம்மடைப்பட்டி : புதுச்சத்திரம் உள்ளிட்ட கிராமங்களில் : வறண்டு இருந்த விவசாய நிலங்கள் : கண்மாய் : வரத்து வாய்க்கால்களில் ஈரத்தன்மை ஏற்பட்டு உள்ளது. இதையடுத்து : விவசாயிகள் புரட்டசிப்பட்ட சாகுபடி பணிகளை ஆர்வத்துடன் துவக்கி உள்ளனர். மழை தொடர்ந்து பெய்யும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக : நெல் சாகுபடியாளர்கள் நாற்றங்கால் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சோத்துப்பாறை அணை நீர்மட்டம் உயர்வு

பெரியகுளம் : கொடைக்கானல் மலைப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்வதால் :

சோத்துப்பாறை அணை மூன்று நாட்களில் 22 அடி உயர்ந்துள்ளது. பெரியகுளத்தில் இருந்து 8 கி.மீ. : தொலைவில் : மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சோத்துப்பாறை அணை உள்ளது. அணையின் மொத்த உயரம் 126 அடி. சில வாரங்களுக்கு முன் அணை நீர் மட்டம் 30 அடியாக இருந்தது. கொடைக்கானல் மலைப்பகுதியல் : மழை பெய்து வருவதால் அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. செப்.,1ல் 51 அடியாகவும் : 2ல் 61 அடி : 3ல் 70 அடியாகவும் : நேற்று 73.14 அடியாகவும் : மூன்று நாட்களில் 22 அடி உயர்ந்துள்ளது. மழையளவு 8 மி.மீ.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## பருவம் தவறி பெய்யும் மழையால் வறட்சியில் சிக்கி தவிக்கும் கிருஷ்ணகிரி மாவட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளாக பருவம் தவறி பெய்யும் மழையால் நீர்நிலைகள் வறண்டு மாவட்டம் வறட்சியில் சிக்கி தவிக்கிறது. குறிப்பாக மாவட்டத்தில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் தண்ணீர் இன்றி காய்ந்து கிடக்கின்றன.

**வளமையான மாவட்டம்**

தமிழகத்தில் விவசாயத்தை நம்பி உள்ள மாவட்டங்களில் ஒன்று கிருஷ்ணகிரி மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் சுமார் 5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மானாவாரி மற்றும் ஆற்று நீர் பாசனம் மூலம் விவசாயம் செய்யப்படுகிறது. விவசாயத்தை முக்கிய தொழிலாக நம்பி 2 லட்சத்து 81 ஆயிரத்து 733 பண்ணை குடும்பங்கள் உள்ளன.

கிருஷ்ணகிரி மற்றும் கெலவரப்பள்ளி அணை பாசன பகுதிகளில் நெல் முக்கிய பயிராகவும், மானாவாரி பகுதியில் முக்கிய பயிராக ராகியும், பயறு வகைகளான நிலக்கடலை, காராமணி, உளுந்து, பச்சைப்பயறு, துவரை போன்றவையும் பயிரிடப்பட்டு வருகிறது. மேலும் தோட்டக்கலையில் மாமரங்களும், பூ வகைகளும் முக்கிய இடத்தை பிடித்துள்ளன.

**பருவம் தவறிய மழை**

இம்மாவட்டத்தை பொறுத்தவரை மொத்த விவசாய பரப்பில் சுமார் 75 சதவீதம் அதாவது 3½ லட்சம் ஏக்கர் பரப்பளவில் மானாவாரி பயிர்களே பயிரிடப்படுகின்றன. குறிப்பாக தமிழகத்தில் ராகி உற்பத்தியில் கிருஷ்ணகிரி மாவட்டம் தான் முதலிடம் வகிக்கிறது. தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர் வட்டங்களில் சுமார் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவில் ராகி மானாவாரி பயிராக பயிரிடப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாகவே பருவ மழை சரியான பருவத்தில் பெய்யாமல் விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளில் மானாவாரி பயிருக்கு ஏற்ற வைகாசி மற்றும் ஆடிப்பட்டங்களில் மழை பெய்யவில்லை. ஜூன், ஜூலை மாதங்களில் பெய்ய வேண்டிய மழை பெரும்பாலும் செப்டம்பர்

மாதங்களில் பெய்து வருகிறது. இதனால் மானாவாரி பயிர் சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

**வறண்டு கிடக்கும் ஏரிகள்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் 84 ஏரிகளும், ஊரக வளர்ச்சித்துறை பராமரிப்பில் ஆயிரத்து 172 ஏரிகளும் உள்பட மொத்தம் ஆயிரத்து 256 ஏரிகள் உள்ளன. கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை சரியாக பெய்யாததால் இவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்றன. குறிப்பாக ஊத்தங்கரை, மத்தூர் மற்றும் பர்கூர் ஒன்றியங்களில் உள்ள ஏரிகள் எவற்றிலும் துளி கூட தண்ணீர் இல்லை.

**2 லட்சம் ஆழ்துளை கிணறுகள்**

ஏரிகள் மட்டுமல்ல, வறட்சியால் நிலத்தடி நீர் மட்டம் கிடுகிடுவென குறைந்ததால் மாவட்டத்தில் உள்ள 2 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாய ஆழ்துளை கிணறுகளும் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்றன. பர்கூர், ஊத்தங்கரை ஒன்றியங்களில் 2 ஆயிரம் அடிக்கு கீழ் சென்றாலும் ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் வருவதில்லை. இந்த பகுதி மக்கள் குடிநீருக்கே மிகவும் அவதிப்பட்டு வருகிறார்கள்.

இதேபோல் மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திறந்தவெளி விவசாய கிணறுகள் உள்ளது. இவற்றிலும் 95 சதவீதம் கிணறுகளில் தண்ணீர் இல்லை. இதனால் மாவட்டத்தில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்காக பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டு வருகிறார்கள்.

**வீட்டுமனைகளாகும் மாந்தோட்டங்கள்**

தமிழகத்தில் அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில்தான் 40 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் மா பயிரிடப்படுகிறது. மழையை நம்பி உள்ள மானாவாரி தோட்டப்ப பயிர்களில் மாஞ்செடிகளுக்கு முதலிடம் உண்டு. கோடை காலத்தில் விளையும் மாங்காய்க்கு அப்போது பெய்யும் கோடை மழையே வரப்பிரசாதம். ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக கோடை மழையும் கை கொடுக்கவில்லை. இதனால் மா விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு கோடை மழை பெய்யாததால் விளைந்த மாங்கனிகள் அளவு சிறுத்து காணப்பட்டது. மேலும் காயில் சதைப் பிடிப்பு இல்லை. இதனால் மா மற்றும் மாங்கூழ் உற்பத்தி, ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டது. பருவ மழையும் கைவிட்டதால் மத்தூர்,

பர்கூர், ஊத்தங்கரை பகுதியில் மா மரங்கள் கருக தொடங்கின. இதனால் விவசாயிகள் மாந்தோட்டங்களை அழித்து விட்டு வீட்டுமனைகளாக்கி விற்பனை செய்து வருகிறார்கள்.

**<u>ஒரு பக்கம் வறட்சி, மறுபக்கம் செழிப்பு</u>**

மாவட்டத்தின் நிலை இவ்வாறு இருக்க, இம்மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணை மற்றும் கெலவரப்பள்ளி அணை பாசன பகுதிகளில் விவசாயம் செழிப்பாக உள்ளது. கர்நாடகாவில் இந்த ஆண்டு பெய்த பலத்த மழையால் இந்த அணைகளுக்கு நீர்வரத்து அதிகமாக இருந்தது. இதனால் கிருஷ்ணகிரி மற்றும் கெலவரப்பள்ளி அணை பாசன பகுதிகளில் முதல் போக சாகுபடியாக சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

மேலும் அணை படுகையில் உள்ள ஏரிகளில் தண்ணீர் நிறைந்து காணப்படுகிறது. பர்கூர் மத்தூர், ஊத்தங்கரை போன்ற பகுதிகள் வறட்சியின் பிடியில் சிக்கி கிடக்கும் அதே வேளையில் தென்பெண்ணை ஆற்றுப் படுகையில் உள்ள காவேரிப்பட்டணம் மற்றும் கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் ஒரு பகுதியில் அணை நீரால் விவசாயம் சிறப்பாக உள்ளது.

**<u>கிராமங்களை காலி செய்யும் பொதுமக்கள்</u>**

மழை பெய்யாமல் கடும் வறட்சி நிலவி வரும் நேரங்களில் நல்ல மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டும் என பல்வேறு நூதன வழிபாடுகளை கிராம மக்கள் மேற்கொள்வார்கள். அதில் ஒன்றுதான் "வலசை போதல்" எனப்படும் கிராமத்தை காலி செய்து வனப்பகுதிக்கு செல்லும் வழிபாடு. தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் இந்த நூதன வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் குழந்தை குட்டிகளோடு, தங்களது கால்நடைகள், செல்லப்பிராணிகள் அனைத்தையும் அழைத்துக் கொண்டு ஊரை காலி செய்து விட்டு காட்டுப்பகுதி அல்லது தோட்டத்தில் தங்கி விட்டு மாலை மீண்டும் கிராமத்திற்கு வருவார்கள். வழிபாட்டுக்காக மட்டுமல்ல, 3 ஆண்டுகளாக பருவம் தவறி பெய்யும் மழையால் விவசாயம் பொய்த்துப் போனதால் கிராம மக்கள் ஊரை காலி செய்து விட்டு அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடகாவிற்கு பிழைப்பு தேடி செல்வதும் அதிகரிக்க தொடங்கி உள்ளது.

## கிடப்பில் போடப்பட்ட படேதுலாவ் கால்வாய் திட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆறு பாயும் பகுதிகள் வளமாகவும், பர்கூர், மத்தூர், ஊத்தங்கரை போன்ற பகுதிகள் தொடர்ந்து வறட்சியின் பிடியிலும் சிக்கி தவிப்பது தொடர்கதையாகி விட்டது. இதை தடுக்க தென்பெண்ணை மற்றும் மார்க்கண்டேய நதிகளின் உபரி நீரை திருப்பி படேதுலாவ் ஏரிக்கு கொண்டு சென்று அங்கிருந்து கால்வாய் மூலம் பர்கூர் மற்றும் மத்தூர் ஒன்றியங்களில் உள்ள 100–க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் படேதுலாவ் ஏரி கால்வாய் திட்டம் ரூ.13 கோடி மதிப்பில் கடந்த 2004–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. கால்வாய்கள் வெட்டும் பணிகள் நடந்து கொண்டிருந்த போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால், அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது. அதன்பிறகு 10 ஆண்டுகளாகியும் மீண்டும் அந்த திட்டம் தொடங்கப்படவில்லை. ஏற்கனவே வெட்டப்பட்ட கால்வாய்கள் தூர்ந்து போயும், பல இடங்களில் புதர் மண்டியும் கிடக்கின்றன. மேலும் தென்பெண்ணை ஆற்றை படேதுலாவ் ஏரியுடன் இணைக்கும் திட்டமும் ரூ.20 கோடி மதிப்பில் தயார் செய்யப்பட்டு கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த கால்வாய் திட்டம் நிறைவேற்றப்பட்டால் வறட்சியின் பிடியில் சிக்கி தவிக்கும் பர்கூர், மத்தூர் ஒன்றியங்களுக்கு ஓரளவுக்கு விடுதலை கிடைக்கும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பாகும்.

## மீன்குட்டைகளாகும் ஏரிகள்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆயிரத்து 256 ஏரிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்றன. மாவட்டத்தின் மிகப்பெரிய ஏரியான படேதுலாவ் ஏரிக்கு தண்ணீர் வந்து 8 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்த ஏரிகளில் இப்போது மணல் திருட்டுதான் ஜோராக நடைபெற்று வருகிறது. அதே வேளையில் கிருஷ்ணகிரி அணையின் பாசன படுகையில் உள்ள அவதானப்பட்டி ஏரி, திம்மாபுரம் ஏரி, பாரூர், பெனுகொண்டாபுரம், தளிஅள்ளி, பாலேகுளி, குண்டலப்பட்டி, கால்வேஅள்ளி, மிட்டஅள்ளி உள்பட 30 ஏரிகளில் மட்டும் எப்போதும் தண்ணீர் நிரம்பி உள்ளது. ஆனால் இந்த ஏரிகளில் உள்ள தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்துவதை விட கிராம மக்கள் மீன் வளர்க்கும் குட்டைகளாக மட்டுமே பயன்படுத்தி வருகிறார்கள் என்பதுதான் வேதனையான உண்மை.

## இந்த ஆண்டும் பருவம் தவறி பெய்யும் மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஒரு ஆண்டு சராசரி மழையளவு 830.50 மி.மீட்டராகும். கடந்த 5 ஆண்டுகளில் சராசரி மழையளவுக்கு மழை பெய்து வருகிறது. ஆனால் பருவம் தவறி பெய்வதால் விவசாயிகளுக்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை. இந்த ஆண்டும் ஜூன், ஜூலை மாதங்களில் பெய்ய வேண்டிய மழை மிகவும் குறைவாக பெய்தது. ஆனால் வழக்கம்போல் செப்டம்பர் மாதத்தில் மழை பெய்ய தொடங்கி உள்ளது. கடந்த சில நாட்களாக கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் சூளகிரி, கெலமங்கலம் போன்ற பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. வைகாசி மற்றும் ஆடிப்பட்டங்களில் மழை பெய்தால் தான் மானாவாரி பயிர்களை பயிரிட முடியும். ஆனால் பருவம் தவறி பெய்யும் போது மானாவாரி பயிர்கள் மட்டுமல்ல, நெற்பயிர்களும் அறுவடை தருணத்தில் மழை பெய்து விவசாயிகளை இக்கட்டில் ஆழ்த்தி விடுகிறது. பருவம் தவறி பெய்த மழையால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை. காரணம், ஒரு மாவட்டத்தின் சராசரி மழையை விட பாதியளவு பெய்திருந்தால் தான் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்படும். ஆனால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சராசரி மழை பெய்கிறது. ஆனால் தேவையில்லாத காலத்தில் பெய்வதால் அரசின் வறட்சி நிவாரணமும் கிடைக்க வழியில்லாமல் போய்விட்டதாக விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

## கரும்பு தட்டுப்பாட்டால் அச்சு வெல்லம் உற்பத்தி பாதிப்பு



கோபி, கவுந்தப்பாடி பகுதிகளில் கரும்பு தட்டுப்பாட்டால் அச்சு வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது.

<u>வெல்லம் உற்பத்தி ஆலைகள்</u>

கோபிசெட்டிபாளையம், கொறவம்பாளையம், முள்ளங்கரை, குட்டியாக்கவுண்டன்புதூர், கடுக்காம்பாளையம், பா.நஞ்சக்கவுண்டன்பாளையம், பெருமுகை, கூகலூர், ஆண்டிபாளையம், அய்யம்பாளையம், கவுந்தப்பாடி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் 15–க்கும் மேற்பட்ட நாட்டுச் சர்க்கரை மற்றும் அச்சு வெல்லம் உற்பத்தி செய்யும் ஆலைகள் உள்ளன.

இந்த ஆலைகளில் கோபி, அம்மாபேட்டை, கோவை மாவட்டம் அன்னூர், சேலம் மாவட்டம் மேட்டூர், மேச்சேரி, விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி ஆகிய பகுதிகளை சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

### பஞ்சாமிர்தம் தயாரிக்க...

கோபி, டி.என்.பாளையம், சத்தியமங்கலம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாய தோட்டங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் கரும்புகளை, கிரஷர் இயந்திரம் மூலம் சாறு பிழிந்து, அகன்ற கொப்பரையில் காய்ச்சி நாட்டுச்சர்க்கரை மற்றும் அச்சு வெல்லங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் நாட்டுச்சர்க்கரை மற்றும் வெல்லங்கள் கவுந்தப்பாடி, சித்தோடு, கோவை, பழனி ஆகிய பகுதிகளில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது. மேலும் கேரளா, குஜராத் ஆகிய மாநிலங்களுக்கும், பழனியில் தேவசம் போர்டு சார்பில் பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

### உற்பத்தி குறைந்தது

இந்த நிலையில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்துப் போனதாலும், தடப்பள்ளி–அரக்கன்கோட்டை, கீழ்பவானி வாய்க்கால்களில் பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படாததாலும், முதிர்ச்சி அடையும் முன்னரே கரும்புகளை விவசாயிகள் வெட்டி விட்டனர். தற்போது, கரும்பு சாகுபடி பரப்பளவு குறைவாக உள்ளது.

இதன் காரணமாக நாட்டுச்சர்க்கரை மற்றும் அச்சு வெல்லம் தயாரிப்பதற்கு கரும்புகள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இதனால், நாட்டுச்சர்க்கரை மற்றும் அச்சு வெல்லம் உற்பத்தி குறைந்து உள்ளது. கடந்த 6 மாதங்களுக்கு முன்பு சராசரியாக வாரம் ஒன்றுக்கு 4 ஆயிரம் மூட்டைகள் அச்சு வெல்லம் மற்றும் நாட்டுச்சர்க்கரை உற்பத்தி

செய்யப்பட்டது. ஆனால், தற்போது ஆயிரம் மூட்டைகள் வரை மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

### கொள்முதல் விலை உயர்வு

இதுகுறித்து நாட்டுச்சர்க்கரை ஆலை உரிமையாளர் பா.மா.வெங்கடாசலபதி கூறுகையில், “கோபி பகுதிகளில் இருந்து தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளுக்கு நாட்டுச்சர்க்கரை, அச்சு வெல்லங்கள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகிறது. கரும்புகள் விலையும் உயர்ந்து விட்டது.

ரூ.1,500 முதல் ரூ.2 ஆயிரம் வரை கொள்முதல் செய்யப்பட்ட கரும்பு, தற்போது ரூ.2 ஆயிரம் முதல் ரூ.2 ஆயிரத்து 500 வரை விலை உயர்ந்து விட்டது. மேலும் நாட்டுச்சர்க்கரை விலை சரிந்ததால் ஆலை உரிமையாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளனர்“ என்றார்

### தாராபுரம் பகுதியில் தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி



தாராபுரம் பகுதியில் போதிய அளவு மழை பெய்யாததால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. மேலும் தாராபுரம், அலங்கியம், தளவாய்பட்டிணம், கோவிந்தாபுரம், பொன்னாபுரம், அங்கித்தொழுவு, குண்டடம், சூரியநல்லூர், வரப்பாளையம் ஆகிய ஊர்களை சேர்ந்த மக்கள் மழை இன்றி புற்கள் இல்லாததால் கால்நடைகளை வளர்க்க முடியாமலும், அவற்றுக்கு தீவனம் வாங்கிப்போடமுடியாமலும் தவித்தனர். சிலர் மாடு, ஆடுகளை விற்று விட்டனர்.

இந்த நிலையில் கேரளாவில் பெய்த தென்மேற்கு பருவமழையால் அமராவதி அணை நிரம்பியது. இதை தொடர்ந்து அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

தாராபுரம் பகுதியிலும் அவ்வப்போது சாரல் மழை பெய்தது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக தாராபுரம் பகுதியில் தொடர் மழை பெய்தது. இதனால் வெப்பம் ஓரளவு தணிந்தது. தற்போது மேய்ச்சல் நிலங்களில் புற்கள் முளைக்க தொடங்கி விட்டதால் ஆடு மற்றும் மாடுகளுக்கு போதுமான தீவனம் கிடைக்க தொடங்கி உள்ளது. நேற்று முன்தினம் இரவு அரை மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல் ஓடியது.

## தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 7 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு கலெக்டர் பாஸ்கரன் தகவல்

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 7 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என கலெக்டர் பாஸ்கரன் கூறினார்.

7 லட்சம் டன்

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 7 லட்சத்து 75 டன் நெல்லும், 99 ஆயிரம் டன் சிறுதானியங்களும், 2 ஆயிரத்து 89 டன் பயறு வகைகள் என மொத்தம் 7 லட்சத்து 4 ஆயிரத்து 63 டன் உணவு தானிய உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகள் அளவிலும், கிராம அளவிலும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் உணவு தானிய செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்று தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் வேளாண்மைத்துறை சார்பில் நடந்த உணவு தானிய இயக்கம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா 2–வது பசுமைப்புரட்சியை உருவாக்கும் நோக்கத்தில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன்படி தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியை இரு மடங்கு அதிகரிக்கவும், மும்மடங்கு லாபம் பெறவும் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், உற்பத்தி திறனை அதிகரித்து விவசாயிகளுக்கு சந்தை நிலவரம் குறித்த ஆலோசனைகளை வழங்குதல், திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளுதல், பயிர்க்கடன் மற்றும் அரசு மானியம் உரிய விவசாயிகளுக்கு சென்று சேருவதை உறுதி செய்ய வேண்டும்.

விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில்

விஞ்ஞானிகள், வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விவசாயிகளை ஒருங்கிணைத்து பயிர் திட்டம் தயாரித்தல், நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளுக்கான இயக்க திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற முடியும். உணவு தானிய உற்பத்தியை பெருக்க பழைய ரகங்களுக்கு பதிலாக புதிய ரகங்களை வெளியிடுதல், திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்தல் உள்ளிட்ட தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளும், உரிய காலத்தில் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட திட்ட மேம்பாட்டு நடவடிக்கைகளும், அதிக மகசூலை தரக்கூடிய மற்றும் வறட்சியை தாங்கக்கூடிய பயிர் ரகங்களை வெளியிடுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வேளாண்மை நலத்திட்டங்கள் மற்றும் நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்த அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ்குமார், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் சேகர், வேளாண்மை துணை இயக்குநர்கள் ராமதாஸ், சீனிவாசன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர்(பொறுப்பு) வேலாயுதம் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தோட்டக்கலைத்துறை சார்பில் ஒலக்கூர், ஆலங்குப்பம் கிராமத்தில் காய்கறி சேமிப்பு மையங்கள்

தோட்டக்கலைத்துறை சார்பில் ஒலக்கூர், ஆலங்குப்பம் கிராமத் தில் காய்கறி சேமிப்பு மையங்களை கலெக்டர் சம்பத் திறந்து வைத்தார்.



ஒலக்கூர் கிராமத்தில் காய்கறி சேமிப்பு மையத்தை கலெக்டர் சம்பத் திறந்து வைத்தபோது எடுத்த படம்.

<u>காய்கறி சேமிப்பு மையம்</u>

விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலைத்துறை சார்பில் பெருநகர காய்கறி தொகுப்புகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒலக்கூர் கிராமத்தில் காய்கறி சேமிப்பு மையம் தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு சென்னை தோட்டக்கலை ஆணையரக தோட்டக்கலை துணை இயக்குநர் சதாசிவம் தலைமை தாங்கினார். ஒலக் கூர் ஒன்றியக்குழு தலைவர் இந்திராபன்னீர், துணைத் தலைவர் நிர்மலா கோபால கிருஷ்ணன், ஊராட்சி தலை வர் ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழுப் புரம் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் ராசு வரவேற்றார்.

<u>2-ம் பசுமை புரட்சி</u>

விழாவில் விழுப்புரம் மாவட்ட கலெக்டர் சம்பத் கலந்து கொண்டு காய்கறி சேகரிப்பு மையத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசிய தாவது:-

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா ஆணைப்படி தமிழகத்தில் 2-ம் பசுமை புரட்சி ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தை நிரூபிக்கும் வகையில் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளுக்கு கட்டுப்படி யான விலை கிடைக்க வேண் டும், இடைத்தரர்கள் ஒழிக் கப்பட வேண்டும், நுகர்வோர் களுக்கு

நியாயமான விலையில் காய்கறிகள் கிடைக்க வேண் டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

1,027 கிலோ காய்கறி

சந்தையின் தேவைக்கு ஏற்ப காய்கறி சாகுபடி செய்தல், காய்கறி உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரித்தல், வணிக சங்கிலி மற்றும் மதிப்புச்சங்கிலி ஏற்படுத்துதல் போன்றவை இத்திட்டத்தின் இதர நோக்கங்களாகும். தொடக்கவிழாவில் ஒலக்கூர் காய்கறி உற்பத்தியாளர்கள் தொகுப்பை சேர்ந்த 24 விவசாயிகள் ஆயிரத்து 27 கிலோ காய்கறிகளை எடுத்து வந்துள்ளார்கள். இந்த விற்பனை செய்யப்பட்டு சென்னைக்கு எடுத்து சென்று அங்குள்ள நுகர்வோருக்கு காய்கறிகள் விற்பனை செய்யப் படும்.

இவ்வாறு அவர் பேசி னார்.

விழாவில் ஒலக்கூர் ஒன்றிய விவசாயிகள், கிராம மக்கள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். முடிவில் ஒலக்கூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் கார்ல் மார்க்ஸ் நன்றி கூறினார்.

ஆலங்குப்பம்

இதேபோல் மரக்காணம் ஒன்றியத்தில் ஆலங்குப்பம் கிராமத்தில் காய்கறி சேமிப்பு மையத்திற்காக இடம் தேர்வு செய்யப்பட்டது. இந்த மையத்தையும் கலெக்டர் சம்பத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தோட்டக் கலைத்துறை அதிகாரிகள், விவசாயிகள், கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

## திண்டிவனத்தில் தக்காளி விலை வீழ்ச்சி ஒரு கிலோ ரூ.10-க்கு விற்பனை

திண்டிவனம்,

திண்டிவனத்தில் தக்காளி விலை வீழ்ச்சி யடைந்துள்ளது. ஒரு கிலோ ரூ.10-க்கு விற்பனை செய்யப்பட்டது.

ஆந்திராவில் இருந்து தக்காளி...

திண்டிவனம் நேரு வீதியில் காய்கறி மார்க்கெட் உள்ளது. இங்கு 100-க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. இந்த கடைகளுக்கு சென்னை கோயம்பேடு, பெங்களூர், திண்டுக்கல்,

ஆந்திரா உள் ளிட்ட இடங்களில் இருந்து காய்கறிகள் லாரிகள் மூலமாக வருகின்றன. குறிப்பாக தக்காளி ஆந்திராவில் இருந்து வருகிறது. ஆந்திராவில் இருந்து கூடுதல் வாகனங்களில் தக்காளி ஏற்றுமதி செய்யப் பட்டு திண்டிவனத்திற்கு வந்தால் தக்காளி விலை குறைந்து காணப்படும். அதே வேளையில் வரத்து குறைவாக இருந்தால் தக்காளி விலை அதிகமாக இருக்கும்.

## ரூ.10-க்கு விற்பனை

கடந்த 3 வாரங்களுக்கு முன்பு ஆந்திராவில் இருந்து ஒரே ஒரு லாரியில் திண்டிவனம் மார்க்கெட்டிற்கு தக்காளி வந்து இறங்கியது. இதனால் அப்போது ஒரு கிலோ தக்காளி அதிகபட்சமாக ரூ.40-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து தக்காளி விலை படிப்படியாக குறைந்து நேற்று முன்தினம் ஒரு கிலோ தக்காளி ரூ.15-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதே தக்காளி நேற்று ஒரு கிலோ ரூ.10-க்கு கூவி, கூவி விற்பனை செய்யப்பட்டது.

## காரணம் என்ன?

தக்காளி விலை வீழ்ச்சி குறித்து வியாபாரி ஒருவர் கூறுகையில், ஆந்திராவில் இருந்து 3 லாரிகளில் தக்காளி வந்து இறங்கியது. இதனால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தக்காளி வரத்து அதிகமானால் மேலும் விலை குறைய வாய்ப்பு உள்ளது என்றார். திண்டிவனம் காய்கறி மார்க்கெட்டில் உள்ள காய்கறி கடைகளில் நேற்று தக்காளி மலைபோல குவித்து வைக்கப்பட்டிருந்தது. விலை குறைவு என்பதால் பொது மக்கள் தக்காளியை ஆர்வமு டன் வாங்கி சென்றனர்.

தினகரன்

## ரூ.28.87 லட்சத்தில் அதிவிரைவு துவரை சாகுபடி வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு

வேலூர்: வேலூர் அடுத்த காட்பாடி வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.27 லட்சத்தில் துவரை அதிவிரைவு பெருக்க தளைகள் பயிரிடப்பட்டுள்ளது. மேலும் ரூ.1 லட்சத்த 87 ஆயிரத்து 500 மதிப்பில் துவரை விளக்க தளைகள் பயிரிடப்பட்டுள்ளது. நவீன முறையில் பயிரிடப்பட்டுள்ள பெரியபுதூர், ஒட்டந்தாங்கல் மற்றும் சேவூர் ஆகிய கிராமங்களில் உள்ள விலை நிலங்களை, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஜெயசுந்தர் நேற்று ஆய்வு செய்தார். அப்போது அடர்வு செடிகளை களைவது, இடைவெளி பராமரிப்பு, நுனி கில்லுதல், டிஏபி தெளித்தல் மற்றும் பூச்சி நோய் தடுப்பது குறித்த ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். இதில் காட்பாடி உதவி இயக்குனர் விஜயகுமார், வேளாண்மை அலுவலர்கள் முருகன், வெங்கடேசன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சுரபி ரக பருத்தி குவிண்டால் கி6,496க்கு விற்பனை

ராசிபுரம், : ராசிபுரம் அருகே நடந்த பருத்தி ஏலத்தில் சுரபி ரக பருத்தி ஒரு குவிண்டால் கி6,496க்கு ஏலம் போனது.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே அக்கரைப்பட்டியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இதில் அக்கரைப்பட்டி, பொரசல்பட்டி, மதியம்பட்டி, மாமுண்டி, ஆத்துமேடு தொட்டியப்பட்டி, மல்லசமுத்திரம், வெண்ணந்தூர், கட்டிபாளையம், ஒ.சவுதாபுரம், மின்னக்கல், மொஞ்சனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

திருச்செங்கோடு, கொங்கணாபுரம், சேலம், ஆத்தூர், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் பருத்தி மூட்டைகளை கொள்முதல் செய்தனர். இந்த வாரம்

நடந்த ஏலத்தில் தலா 40 கிலோ எடை கொண்ட 1,030 மூட்டை சுரபி ரக பருத்தி விற்பனைக்கு வந்தது. இந்த ஏலத்தில் ஒரு குவிண்டால் கி5,940 முதல் கி6,496 வரை ஏலம் போனது. 1,030 மூட்டை பருத்தியை வியாபாரிகள் கி20 லட்சத்துக்கு கொள்முதல் செய்தனர்.

### கிருஷ்ணகிரி அருகே பஞ்சகாவ்யா தயாரிப்பு பயிற்சி விவசாயிகளுக்கு விளக்கம்

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி அருகே வேளாண்மை மற்றும் தோட்டக்கலை மாணவிகள் பஞ்சகாவ்யா என்னும் வளர்ச்சி ஊக்கி கரைசலை விவசாயிகளுக்கு செய்து காட்டி, நன்மைகளை எடுத்துரைத்தனர்.
கிருஷ்ணகிரி அடுத்த கே.பூசாரிப்பட்டியில் உள்ள விவசாயி மணி என்பவரின் நிலத்தில் பஞ்சகாவ்யம் என்னும் வளர்ச்சி ஊக்கி கரைசல் தயாரிப்பு விளக்க முகாம் நடைபெற்றது. ஆதிபராசக்தி வேளாண் மற்றும் தோட்டக்கலை மாணவிகள் சாந்தி, வினோதினி, புனிதா, நந்தினி, மகாலட்சுமி, புவனேஷ்வரி ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு செய்து காட்டி, அதன் நன்மைகளை எடுத்துரைத்தனர்.
அப்போது அவர்கள் கூறுகையில், மாட்டுச் சாணம், சிறுநீர், பால், தயிர், வெல்லம், நெய், வாழை, இளநீர் மற்றும் தண்ணீர் ஆகியவற்றை கொண்டு பஞ்சகாவ்யம் தயாரிக்கலாம். இந்த கரைசலை அனைத்து வேளாண் பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். பஞ்சகாவ்யா கரைசல் இயற்கை வேளாண் முறை சாகுபடியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது செடியின் வளர்ச்சியை உயர்த்தி, நோய் பற்றா நிலையை கொடுக்கும். அத்துடன் பயிர்களின் பூக்கள் உருவாவதற்கு தூண்டப்படுகிறது. பழச்செடிகளில் வருடம் முழுவதும் பூக்கள் பூத்துக்கொண்டே இருக்கும். பழங்கள் நல்ல மணத்துடனும், சதையுடனும் காணப்படும். அத்துடன் மகசூல் அதிகரிக்கும். விதை மற்றும் நாற்றுகள் நேர்த்தி செய்வதற்கும் பயன்படுகிறது. இந்த கரைசலை பயிர்களின் அனைத்து வளர்ச்சி பருவங்களிலும் தெளிக்கலாம் என செயல்முறை விளக்கத்துடன் செய்து காண்பித்தனர்.

### வறட்சியால் பாதித்த தென்னை விவசாயிகள் இழப்பீடு பெற விண்ணப்பிக்கலாம்

தர்மபுரி, : வறட்சியால் பாதித்த தென்னை மரங்கள் கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் இழப்பீடு கோரும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கலெக்டர் விவேகானந்தன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த தென்னை மரங்களில் ஓராண்டுக்கு சராசரியாக 42 காய்களுக்கு குறைவாக காய்த்த மரங்கள் 50 சதத்துக்கு மேல் மகசூல் இழப்பு எனவும், 42 காய்களுக்கு மேல் காய்த்திருந்தால் 50 சதத்துக்கு குறைவு என மதிப்பீடு செய்யப்படுகிறது. தென்னை மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகள் நிவாரணம் பெற 5 நாள்களுக்குள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் அல்லது உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி, வறட்சி நிவாரண அறிக்கையில் தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். இந்தப் பணி 5 நாள்களுக்குள் முடிக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தீவிரமடையும் மழை பொழிவு சாகுபடி பணிகள் துவக்கம்

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பொழிவு துவங்கியுள்ளது. இதனால், விவசாயிகள் பலரும் சாகுபடி பணிகளை துவங்கியுள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களாக கோடை காலம் போன்று வெயிலின் தாக்கம் இருந்தது. சுட்டெரிக்கும் வெயிலால் பல்வேறு இடங்களில் குடிநீர் பிரச்னை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த 2 நாளாக தர்மபுரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மழை பொழிவு துவங்கியுள்ளது. இண்டூர், பென்னாகரம், காரிமங்கலம், பாலக்கோடு உள்ளிட்ட இடங்களில் கனமழை பெய்தது.
இதனால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் தற்போது ஆடி பட்டத்துக்கான சாகுபடி பணிகளை துவக்கியுள்ளனர். கேழ்வரகு, கம்பு, சோளம் உள்ளிட்ட தானிய பயிர்கள் மற்றும் கத்திரிக்காய், தக்காளி, அவரை உள்ளிட்ட காய்கறி பயிர் களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். நேற்று முன்தினம் தர்மபுரி மாவட்டத்தில் பதிவான மழை அளவு மி.மீட்டரில் வருமாறு: தர்மபுரி 80, பாலக்கோடு 21.3, அரூர் 75, மாரண்டஅள்ளி 13, ஒகேனக்கல் 41, பென்னாகரம் 15, கலெக்டர் அலுவலகம் 45 என்ற அளவில் மழை பெய்துள்ளது.

## வெற்றிலை ஏலம் விலையில் மாற்றமில்லை

பரமத்திவேலூர், : நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுக்கா பாண்டமங்கலம், பொத்தனூர், வெங்கரை, நன்செய் இடையாறு, நலப்பட்டி, குப்புச்சிபாளையம், பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இப்பகுதிகளில் விளையும் வெற்றிலைகளை உள்ளூர் பகுதிகளில் செயல்படும் தனியார் வெற்றிலை மண்டிகளுக்கும், தினசரி ஏல மார்க்கெட்டிற்கும் கொண்டு செல்கின்றனர். ஏலம் எடுப்பதற்கு கரூர், ஈரோடு, மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் வந்திருந்து ஏலம் எடுத்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், கர்நாடகா, ஆந்திரா, கேரளா, உத்திரப்பிரதேசம், மத்தியபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், பெங்களூரு, மும்பை உள்ளிட்ட பெருநகரங்களுக்கும், லாரி, ரயில் மூலமும் அனுப்பி வைக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக வெற்றிலையின் விலை அதிகரித்து இருந்தது. நேற்று முன் தினம் நடைபெற்ற ஏலத்தில் 104 கவுளி கொண்ட வெள்ளை வெற்றிலை முதல் ரகம் ஒரு கோட்டை கி4500க்கும், வெள்ளை வெற்றிலை 2வது ரகம் கி3500, கற்பூரி வெற்றிலை 104 கவுளி கொண்ட ஒரு கோட்டை முதல் ரகம் கி 2000க்கும், இதில் இரண்டாவது ரகம் 104 கவுளி கொண்ட ஒரு கோட்டை கி1500க்கும் ஏலம் போனது.

நேற்று நடைபெற்ற ஏலத்தில் 104 கவுளி கொண்ட ஒரு கோட்டை வெள்ளை வெற்றிலை முதல் ரகம் கி4500க்கும், இதில் 2வது ரகம் கி 3500க்கும், கற்பூரி முதல் ரகம் 104 கவுளி கொண்ட ஒரு கோட்டை கி2000க்கும், இதில் இரண்டாவது ரகம் 104 கவுளி கொண்ட ஒரு கோட்டை கி1500க்கும் ஏலம் போனது.

தொடர்ந்து கடந்த 15 நாட்களாக வெற்றிலை விலை உயர்ந்து காணப்பட்ட நிலையில் கடந்த 2நாட்களாக வெற்றிலை விலை அதிகரிக்கவோ, குறையவோ இல்லை. விலை நிலையாக உள்ளது. இனி வரும் நாட்களில் விசேஷ மற்றும் முகூர்த்த நாட்கள் வர உள்ளதையொட்டி வெற்றிலைக்கான தேவை அதிகரிக்கும், அப்போது விலை உயர வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## சர்க்கரை ஆலை கழிவு நீர் திறப்பு பிஏபி வாய்க்கால்கள் நாசம்

உடுமலை, :பிஏபி வாய்க்காலில் சர்க்கரை ஆலை கழிவு நீர் திறந்து விடுவதால் வாய்க்கால் மடைகள், ஷட்டர்கள் நாசமாகி விட்டதாக விவசாயிகள் முறையிட்டுள்ளனர்.

உடுமலை தாலுகா அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. ஆர்.டி.ஓ.தலைமை வகித்தார். தாசில்தார்கள் சைபுதீன், ஜீவா, ஆறுமுகம் உள்பட அனைத்து துறை அதிகாரிகள்,விவசாயி கள் பங்கேற்றனர். இதில் நடந்த விவசாயிகள் விவாதம் விவரம்: மதுசூதனன்: கிராம நிர்வாக அலுவலர்கள், மின்வாரிய உதவி பொறியாளர்கள் கிராமப்பகுதிகளுக்கு வருவதில்லை.

லதா: வெளிமாவட்டத்தில் இருந்து வரும் கிராம நிர்வாக பணியாளர்கள் பணிமாறுதல் பெற்று சென்று விடுகிறார்கள். அவர்களுக்கு பதிலாக புதிய கிராம நிர்வாக அலுவலர்களை உடனடியாக நியமிக்க முடிவதில்லை.

பாலதண்டபாணி: திருமூர்த்தி அணையில் இருந்து 4ம் மண்டல பாசனம் துவங்கி உள்ளது. இந்நிலையில் சொந்த விருப்பு, வெறுப்பு காரணமாக கடைமடை விவசாயிகளுக்கு தண்ணீர் விட சிலர் மறுக்கின்றனர். கல் வாய்க்கால்கள் முற்றிலும் அழிந்த நிலையில் உள்ளன, இதனால் கடைமடை நிலத்துக்கு போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே வாய்க்காலை சீர்படுத்தி தர வேண்டும்.அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இருந்து தினமும் கழிவு நீர் பிஏபி வாய்க்காலில் விடப்படுகிறது. இதனால் 4 வாய்க்கால் ஷட்டர்கள், 4 மடைகள் முற்றிலும் சேதமடைந்து வாய்க்காலே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கழிவு நீர் விடுவதை தடுக்க வேண்டும். உடுமலை வாய்க்கால் தூர்வாரப்பட்ட நிலையில் பள்ளபாளையம், எஸ்விபுரம் பகுதிகளில் குப்பைகள் அதிகளவில் போடப்படுகிறது. அதை ஊராட்சி நிர்வாகம் மூலம் சுத்தப்படுத்த வேண்டும்.

பரமசிவம்: உரம், பூச்சிமருந்து, விதை ஆகியவற்றின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. அதை கட்டுப்படுத்த வேளாண்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆர்.டி.ஓ.லதா: மாவட்ட கலெக்டரின் கவனத்துக்கு கொண்டு சென்று இப்பிரச்னைக்கு தீர்வு காணலாம்.

ராமலிங்கம்: என்ன பயிர் செய்ய வேண்டும் என்ற தகவல் விவசாயிகளுக்கு தெரிவிக்காத நிலையில் பிஏபி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் தண்ணீரை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை அதிகாரிகள்: பாசன சபை தலைவர்களுக்கு முறையாக தகவல் சொல்லித்தான் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

வேளாண் அதிகாரிகள்: தண்ணீர் திறந்து விடுவது குறித்து மாவட்ட வேளாண் மை இயக்குனருக்கு தகவல் தெரிவிப்பதில்லை. உங்களை போல் தான் நாங்களும் நாளிதழ்களில் பார்த்து தெரிந்து கொள்கிறோம். சாகுபடி பயிர் குறித்து தகவல் தெரிவிக்க ஒரு மாத அவகாசம் தேவைப்படும். இந்நிலையில் சாகுபடி பயிர் குறித்து எப்படி முன்கூட்டியே தெரிவிப்பது. நெல் மற்றும் பிற பயிர்களின் விதைகள் தயாராக உள்ளது. மக்காசோளம் விதைகள் தனியாரிடம் உள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உதவியை செய்ய தயாராக இருக்கிறோம்.இவ்வாறு விவாதம் நடந்தது.

## வாழை ஆராய்ச்சி பற்றி சொற்பொழிவு கூட்டம்

திருச்சி, : திருச்சி ஜோசப் கல்லூரியில் பாலம் நினைவு அறக்கட்டளையின் சார்பாக 44வது சொற்பொழிவு கூட்டம் நடைபெற்றது. ஜோசப் கல்லூரி தாவரவியல் துறை மற்றும் அன்ஸா மூலிகை உணவு நிறுவனத்துடன் இணைந்து வாழை ஆராய்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையொப்பமிட்டு பரிமாற்றிக் கொண்டது. நிகழ்ச்சி கல்லூரியின் அதிபர் ஜான் பிரிட்டோ தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ஆண்ட்ரூ, தேசிய வாழை ஆராய்ச்சி மைய நிறுவனத்தின் இயக்குநர் முஸ்தபா, அன்ஸா மூலிகை உணவு நிறுவன இயக்குநர் பாலமுரளி ஆகியோர் இந்த ஒப்பந்தங்களை பரிமாற்றிக் கொண்டனர். தேசிய வாழை ஆராய்ச்சி மைய நிறுவனத்தின் இயக்குநர் முஸ்தபா "‘வாழை ஆராய்ச்சியில் தற்கால முன்னேற்றங்கள் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். வாழை பயிரிடும் திருச்சி, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கும் நாட்டின் மற்ற விவசாயிகளுக்கும் தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிவரும் தற்கால யுத்திகளையும், கண்டுபிடிப்புகளையும் பற்றி விரிவாக பேசினார்.

## தொடர் மழையால் பழநி பகுதி அணைகளின் நீர்மட்டம் உயர்வு பொதுமக்கள் மகிழ்ச்சி

பழநி, : தொடர் மழை காரணமாக பழநி பகுதியில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. இக்கிராமங்களின் விவசாயம் இப்பகுதியில் உள்ள அணைகளை நம்பியும், அணைகளில் இருந்து நீர்வரத்து பெறும் கண்மாய்களை நம்பியுமே இருந்து வருகிறது. கடந்த 2 வருடங்களாக பழநி பகுதியில் போதிய மழை

பெய்யவில்லை. இதனால் அணைகள் மற்றும் கண்மாய்கள் வறண்டன. விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. விவசாயத்திற்கு மட்டுமின்றி குடிநீருக்கே கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
பழநி பகுதியில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. கடந்த ஒரு வாரத்தில் பழநி நகரில் பெய்த மழையின் சராசரி அளவு 10 மில்லிமீட்டராக பதிவாகி உள்ளது. அணை பகுதியில் பெய் மழையால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கடந்த 10 நாட்களுக்கு முன் 11.70 அடியாக இருந்த பாலாறு&பொருந்தலாறு அணையின் நீர்மட்டம் 17 அடி உயர்ந்து தற்போது 28.74 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 601 கனஅடி நீர் வருகிறது. 2 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. 13.98 அடியாக இருந்த வரதமாநதி அணையின் நீர்மட்டம் 14 அடி உயர்ந்து தற்போது 27.88 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 74 கனஅடி நீர் வருகிறது. 2 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதுபோல், 18.70 அடியாக இருந்த குதிரையாறு அணையின் நீர்மட்டம் 11 அடி உயர்ந்து 29.53 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 69 கனஅடி நீர் வருகிறது. 3 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் பழநி பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நீங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### தாண்டிக்குடி மலைக்கிராம பகுதிகளில் காட்டெருமை அட்டகாசம் விவசாயிகள் கவலை

திண்டுக்கல், : தாண்டிக்குடி மலைக்கிராம பகுதிகளில் காட்டெருமை தொல்லை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தாண்டிக்குடி மலைக்கிராமத்தை சுற்றி பண்ணைக்காடு, பன்றிமலை, கேசி பட்டி, மஞ்சள்பரப்பு உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மக்கள் விவசாய தொழில் செய்து வருகின்றனர். வனப்பகுதியில் சுற்றித்திரியும் காட்டெருமைகள் தண்ணீரை தேடி அவ்வப்போது ஊருக்குள் புகுந்து விளை பயிர்களை நாசம் செய்கின்றன. மேலும் விவசாயிகளையும், கூலி தொழிலாளிகளையும் தாக்குவது தொடர்கதையாக நடந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் இதுவரை 7 பேர் காட்டெருமை தாக்கி பலியாகியுள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து கை, கால்களை இழந்துள்ளனர்.
கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு மஞ்சள்பரப்பை சேர்ந்த கண்ணகி (67) என்ற

மூதாட்டியை காட்டெருமை தாக்கியதில் படுகாயம் அடைந்தார். இந்நிலையில் நேற்று பேத்திரைகாடு பகுதியை பிரகாஷ் (26) என்பவர் தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது அவ்வழியாக வந்த காட்டெருமை திடீர் என தாக்கியது.

இதில் படுகாயம் அடைந்தவரை சக விவசாயிகள் கே.சி.பட்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து பன்றிமலையை சேர்ந்த விவசாயி ஜானகிராமன் கூறுகையில், Ôஒவ்வொரு கட்டெருமைகளும் 500 கிலோ முதல் 800 கிலோ வரை எடை கொண்டதாக உள்ளது. இது தண்ணீரை தேடி ஊருக்குள் வரும்போது பயிர்களை சேதப்படுத்துகிறது. இதனால் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகளையும், தொழிலாளர்களையும் தாக்கி வருவதால், வேலைக்கு வர தொழிலாளர்கள் அஞ்சுகின்றனர். வனத்துறையினரிடம் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. வரும் காலங்களில் உயிர்ப்பலி ஏற்படாமல் இருக்க காட்டெருமைகள் ஊருக்குள் வருவதை தடுக்க வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்Õ என்றார்.

## ஆத்தூரில் விடிய விடிய கனமழை நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்ததாக விவசாயிகள் மகிழ்ச்சி

ஆத்தூர், ஆத்தூரில் விடிய விடிய பெய்த கனமழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் லேசான தூறலுடன் மழை பெய்ய துவங்கி நள்ளிரவு 3 மணி வரை பெய்தது. அதிகாலை வரை 90.5 மில்லி மீட்டர் அளவிற்கு மழை பதிவாகி உள்ளது. இதனால் ஆத்தூர் மற்றும் சுற்று வட்டார பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மழையினால் தற்போது மஞ்சள் பயிரில் உடுபயிராக பயிரிடப்பட்டுள்ள பச்சைமிளகாய், தக்காளி நல்ல விளைச்சல் அடையும். அறுவடையின் போது, 2 மடங்கு அளவிற்கு பச்சை மிளகாய், தக்காளி விற்பனைக்கு கொண்டு வரப்படும். இதனால் காய்கறிகளின் விலை வெகுவாக குறையும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## திருந்திய நெல் சாகுபடி விழிப்புணர்வு முகாம்

சேலம், : சேலம் அயோத்தியாப்பட்டணம் சுற்றுப்புற கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி விழிப்புணர்வு முகாம்கள் துவக்கப்பட்டுள்ளது. சம்பா பருவத்தில் நெல் சாகுபடியை மேம்படுத்தவும், ஹெக்டருக்கு 10 மெட்ரிக் டன் மகசூலை பெருக்கவும் திருந்திய நெல் சாகுபடி முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் சேலம் மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் சுற்றுப்புற கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி குறித்த விழிப்புணர்வு முகாம்கள் துவக்கப்பட்டுள்ளது. சுக்கம்பட்டி கிராமத்தில் நடந்த திருந்திய நெல் சாகுபடி விழிப்புணர்வு முகாமை சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர் துவக்கி வைத்தார். சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் மகேந்திரகுமார் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார். துணை பேராசிரியை ஜெகதாம்பாள், நுண்ணூட்டங்கள் குறித்தும் உதவிபேராசிரியர் ஸ்ரீராம் விதை உற்பத்தி குறித்தும் பேசினர். வேளாண்மை உதவி இயக்குநர் செல்லதுரை, பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்தும் பேசினார். இதற் கான ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜ், உதவி அலுவலர் செந்தில்குமார், சக்கரவர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.

## கிருஷ்ணகிரியில் வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு பட்டுமுட்டை உற்பத்தி செயல்விளக்கம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போகனப்பள்ளி என்னும் கிராமத்தில் வேலூர் ஆதிபராசக்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை கல்லூரி மாணவிகள் குழுவினர் தங்கியிருந்து பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்களுக்கு வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் கல்லூரி மாணவிகள் கலைச்செல்வி, சௌதாமணி, சுபத்ரா, ஹனி, அஞ்சனா, காவிய அபிநயா, சௌமியா ஆகியோர் கொண்ட குழுவினர் கிருஷ்ணகிரி பட்டு வளர்ச்சித்துறை சிஎஸ்ஆர் பட்டு முட்டை வித்தகத்தின் பட்டு முட்டை உற்பத்தி குறித்து பயிற்சி பெற்றனர். அப்போது மத்திய பட்டு வாரியமும், தமிழக அரசின் பட்டு வளர்ச்சித்துறையும் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து கேட்டறிந்தனர். சிஎஸ்ஆர் பட்டு வித்தகத்தின்

ஆலோ சகர் அழகேசன், ஆய்வாளர் ரவிஞானம் ஆகியோர் மாணவிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

### பருவ மழையை பயன்படுத்தி பயறு வகை சாகுபடி வேளாண் அதிகாரி அழைப்பு

கிருஷ்ணகிரி, : பருவ மழையை பயன்படுத்தி பயறு வகை பயிர்களை சாகுபடி செய்து பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். வேப்பனஹள்ளி ஒன்றியம் அத்திகுண்டா கிராமத்தில் தேர்வு செய்யப்பட்ட 30 விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் 2013&14ம் ஆண்டு திட்டத்தின்கீழ் பருவகால பயறு வகை பயிற்சி அளிக்கப்பட்டது. துவக்க விழாவிற்கு நாடுவானப்பள்ளி ஊராட்சி மன்ற துணைத்தலைவர் சின்னசாமி தலைமை வகித்தார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

தற்போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி காராமணி, உளுந்து போன்ற பயறு வகை பயிர்களை அதிக அளவில் பயிரிட வேண்டும். பயறு வகை விதைகளை விதைக்கும் போது பூஞ்சாண மற்றும் உயிர் உரங்களை கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். பூக்க ஆரம்பிக்கும் போதும், 50 சதவீத பூத்த நிலையிலும் 2 சதவீதம் டிஏபி கரைசலை தெளிக்க வேண்டும்.

வேப்பன+ள்ளியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் போதுமான அளவு விதைகள், உரங்கள், பயறு வகைகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்ட இயக்கத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதை முழுமையாக விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த பயிற்சியின்போது களை எடுக்கும் இயந்திரம், தெளிப்பாண்கள், களை வெட்டும் கருவி மற்றும் சூரிய ஒளி பயன்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்கும் செயல்விளக்கங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

ஆள் பற்றாக்குறை நிலையை போக்கிட வேளாண் இயந்திரங்களை பயன்படுத்திட விவசாயிகளை அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். ஏற்பாடுகளை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தலைமையில் அனைத்து களப்பணியாளர்கள், அட்மா திட்ட உழவர் நண்பர் விஜியேந்திரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## விவசாய கடன் தள்ளுபடி கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம் கிருஷ்ணகிரியில் இன்று நடக்கிறது

கிருஷ்ணகிரி, : தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலை முன் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. மாநில பொதுச்செயலாளர் துரை மாணிக்கம் தலைமை வகிக்கிறார். மாவட்ட தலைவர் சீனிவாசன், மாவட்ட செயலாளர் கண்ணு முன்னிலை வகிக்கின்றனர். 60 வயது கடந்த விவசாயிகள், விவசாய தொழி லாளர் அனை வருக்கும் மாதம் ரூ3 ஆயிரம் வீதம் ஓய்வூதியம் வழங்க வேண்டும்; ரயில்வே துறைக்கு போடப்படுவதைப் போல், விவசாயத் துறைக்கும் தனி பட்ஜெட் போட வேண்டும். தமிழ்நாட்டில் விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால் கூட்டுறவு வங்கிகளும், தேசிய வங்கிகளும் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்; வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் நடக்கிறது. மாநில துணைத் தலைவர் லகுமய்யா, மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ராமச்சந்திரன் எம்எல்ஏ., சிபிஐ மாவட்ட செயலாளர் நஞ்சப்பா ஆகியோர் கோரிக்கை விளக்கவுரையாற்றுகின்றனர்.

## பிச்சிப்பூ சாகுபடி முறை மாணவிகள் கலந்துரையாடல் தோகைமலை

தோகைமலை அருகே கீழவாளியாம்பட்டியில் பிச்சிப்பூ, மல்லிகைபூ சாகு படி முறை குறித்து கல்லூாி மாணவிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.தோகைமலை ஒன்றிய பகுதிகளில் வேளாண்மை ஆராய்ச்சி குறித்து திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூாி மாணவிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக கீழவாளியாம்பட்டி கிராமத்தில் விவசாய முன் னோடி தர்மராஜ் தோட்டத்தில் சொட்டுநீர் பாசனம் முறையில் பிச்சிப்பூ மற்றும் மல்லிகைப்பூ சாகுபடி முறைகள் மற்றும் இதன் தொழில்நுட்பங்கள் பற்றிய ஆலோசனைகளை தோட்டக்கலை உதவி அலுவலர் மணிமாறன், கார்த்திக்கேயன் முன்னிலையில் நேற்று கலந்துரையாடினார். இதில் முன்னோடி விவசாயிகள் மற்றும் கல்லூாி மாணவிகள் யசோதா, அன்னம், பிருந்தா, தனப்பிரியா, சுபாங்கி, வினோ தினி, மீதாபிஸ்வாஸ், ராஜபிரியா, பத்மலட்சுமி, ரம்யா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விதைநெல் வாங்கும்போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறை விவசாயிகளுக்கு யோசனை

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் விதைநெல் வாங்கும் விவசாயிகள் மற்றும் விற்பனை செய்பவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறை குறித்து தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் மனோகரன் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தற்போது சம்பா பருவ சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். இந்த நேரத்தில் விவசாயிகள் விதைகள் வாங்கும்போது தரமான சான்று பெற்ற விதைநெல்களை வாங்கி பயன்படுத்த வேண்டும். விதை நெல் மூட்டைகளில் சான்று அட்டை மற்றும் உற்பத்தியாளர் அட்டை முறையாக பொருத்தப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். மூட்டைகளில் ஈய முத்திரை பொருத்தி இருக்கிறதா என்பதை பார்த்து வேளாண்மை விரிவாக்க மையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் விதை விற்பனை உரிமம் பெற்ற தனியார் விதை விற்பனை நிலையங்களில் மட்டும் தான் வாங்க வேண்டும். தனியார் கடைகளில் விதைகள் வாங்கும்போது உரிய பணப்பட்டியல் கேட்டு வாங்க வேண்டும். அவ்வாறு வாங்கும்போது அந்த பணப்பட்டியலில் நெல், விதையின் பெயர், ரகம், அளவு, குவியல், எண், காலாவதி நாள் ஆகிய விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும். மேலும் தனியார் விதை விற்பனை நிறுவனங்களிடமும் விதைகள் போதுமான அளவு இருப்பு உள்ளது. அனைத்து விவசாயிகளும் தரமான சான்று பெற்ற விதைகளை உபயோகித்து அதிக மகசூல் பெறலாம். விதைகளின் தரத்தில் சந்தேகம் ஏற்பட்டாலோ அல்லது போலியான விதைகளாக இருக்கலாம் என தோன்றினாலோ விதை ஆய்வு துணை இயக்குனர், காட்டுத்தோட்டம், தஞ்சாவூர் 613 501 என்ற முகவரி அல்லது 04362267959 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மேலும் பாண்டி, விதை ஆய்வாளர், புதுக்கோட்டை என்ற முகவரியிலோ, 9488620197 என்ற எண்ணிலோ, சக்திவேல், விதை ஆய்வாளர், அறந்தாங்கி, 9865557694 என்ற முகவரி மற்றும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு புகார் செய்யலாம். மேற்கண்ட வழிமுறைகளை பயன்படுத்தி தரமான விதைகளை தேர்வு செய்யுமாறு புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

## வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தீவனப்பயிர் சாகுபடி பயிற்சி6ம் தேதி நடக்கிறது

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட் டம் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தீவனப்பயிர் சாகுபடி மற்றும் ஊறுகாய் புல் தயாரிப்பு பயிற்சி முகாம் வரும் 6ம் தேதி நடக்கிறது. இதில் கலந்து கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பு இன்றியமையாத தொழிலாக உள்ளது. இன்றைய காலக்கட்டத்தில் விவசாய நிலங்களின் பரப்பளவு குறைந்து கொண்டு வருகிறது. அதனால் கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல் மற்றும் பசுந்தீவன புல் கிடைப்பது அரிதாக உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் புல்வெளி பரப்பு 5,400 எக்டேர் அளவில் உள்ளது. ஆகையால் கால்நடைகளுக்கு பசுந்தீவனத்திற்கு தீவனப்புல் பயிர்களான கம்பு நேப்பியர் புல் (கோ 4), தீவன மறுதாம்பு சோளம் (கோ 29), கினிப்புல் (கோ 2), தீவன தட்டைப்பயிறு (கோ 5), முயல் மசால், வேலி மசால் போன்ற பயிறு வகை தீவன பயிர்களையும், கொழுக்கட்டை புல் (கோ 1), சுபா புல், அகத்தி போன்ற மரப்பயிர்கள் கால்நடைகளுக்கு புரதசத்து, மாவுசத்து மற்றும் தாது உப்புக்கள் சரிவிகிதத்தில் அளிப்பதால் பால் தரமாகவும், உற்பத்தி அதிகரித்து நல்ல வருமானமும் கிடைக்கும்.

இதை அடிப்படையாக கொண்டு வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தீவன பயிர்களின் உற்பத்தி முறைகள் மற்றும் அவற்றை ஊறுகாய் புல்லாக தயாரிக்கும் முறைகளை ஒருநாள் பயிற்சி முகாம் வரும் 6ம் தேதி நடக்கிறது. இந்த பயிற்சி முகாமில் ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கேற்று பயனடையலாம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள முனைவர் அசோகன், பேராசிரியர் மற்றும் தலைவர், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம், புதுக்கோட்டை என்ற முகவரியிலோ, 9444719043 என்ற செல்போன் எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு புதுக்கோட்டை கலெக்டர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

## கந்தகசத்து அதிகம் உள்ள ஜிப்சம் உரம் இட்டால் நெற்பயிரில் அதிக மகசூல் விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை

நீடாமங்கலம்: நெற்பயிரில் அதிக விளைச்சல் பெறவும், திரட்சியான நெல் மணிகளை உருவாக்கவும் கந்தகசத்துள்ள ஜிப்சம் உரத் தை இட வேண்டும் என்று நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: நெற் பயிருக்கு 16 வகையான ஊட்ட சத்துக்கள் தேவைப்படுகிறது. இவற்றுள் தழை, மணி, சாம்பல், துத்தநாக சத்துக்கள் மட்டுமின்றி கந்தகச் சத்தும் முக்கியமானது. தொடர்ந்து கந்தக சத்து இடாமல் நெல் பயிரிட்டு வந்தால் மண்ணில் உள்ள கந்தகச்சத்து உறிஞ்சப்பட்டு கந்தக சத்து குறைபாடு தோன்ற ஆரம்பிக்கும்.

கந்தக சத்து குறைபாடு தோன்றும்போது பயிரின் வளர்ச்சி குன்றி இருக்கும். முதலில் இளம் தளிர் இலைகள் மஞ்சளாகி பின் மற்ற இலைகளும் மஞ்சள் நிறமாக மாறிவிடும். பயிர்களில் துர்ர் கட்டுதல் குறைந்து விடும். தழைச்சத்து குறைபாடு ஏற்பட்டால் கீழ் இலைகள் மட்டும் மஞ்சளாக மாறும். ஆனால் சந்தகச்சத்து குறைபாட்டினால் இளம் இலைகளில் மஞ்சள் நிறம் தோன்றும். ஒரு டன் நெல் உற்பத்தி செய்ய 2.5 முதல் 3.5 கிலோ கந்தக சத்தை நெற்பயிர் எடுத்துக் கொள்கிறது. நெற்பயிரில் சிம்பு வெடிக்கும் பருவத்தில் அரை சதம் கந்தக சத்து இருக்க வேண் டும். இதற்கு குறைவாக இருந்தால் மற்ற ஊட்டச்சத்து உபயோகத்திறனும் குறைந்து விடும். ஒரு எக்டருக்கு 20 முதல் 30கிலோ கந்தகச்சத்து தேவைப்படுகிறது. கந்தக சத்தை தரக்கூடிய ரசாயன உரங்களான ஜிப்சம் அடி உரமாக இட்டும், மீதி பாதி அளவு கந்த சத்தை மேலுரமாக அம்மோனியம் சல்பேட் இட்டும் கூடுதல் விளைச்சல் பெறலாம். எனவே நெல் பயிர் வளர்ச்சிக்கு முக்கிய மான கந்தகச்சத்து உரத் தை கண்டிப்பாக இட்டு விளைச்சலை மேலும் அதிகரித்து கூடுதல் வருமானம் பெறுங்கள் என விவசாயிகளை, வேளாண் உதவி இயக்குனர் இளஞ்செழியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வடலூர் வடபாதி ஊராட்சி வருமானம் பெருக பொது காய்கறி தோட்டம் பெண் ஊராட்சி தலைவரின் புதிய முயற்சி

மன்னார்குடி: திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அடுத்துள்ள வடுவூர் வடபாதி ஊராட்சியின் வருமானத்தை பெருக்கவும், மக்களுக்கு தரமான காய்கறிகளை வழங்கவும்

பொது காய்கறி தோட்டம் அமைத்து பெண் ஊராட்சி தலைவர் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளார். வடுவூர் வடபாதி ஊராட்சி தலைவராக இருப்பவர் இளவேணி. இவர் ஊராட்சிக்குட்பட்ட கொண்டையூர் என்ற இடத்தில் 3 ஏக்கர் பரப்பளவில் ஊராட்சி சார்பில் காய்கறி தோட்டம் அமைத்துள்ளார். இந்த தோட்டத்தில் கத்தரி, வெண்டை, முருங்கை, மரவள்ளி, பாகற்காய், பரங்கி, கொத்த வரை, முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நன்றாக விளைச்சல் பருவத்திற்கு வந்துள்ளது. இங்கிருந்து தினமும் ஏதேனும் ஒரு காய்கறியை அறுவடை செய்து அருகில் உள்ள காய்கறி கடைக்கு விற்பனை செய்யப்பட்டு அந்த தொகையில் தென்னங்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. மீதமுள்ள தொகையை காய்கறித்தோட்டத்தை மேம்படுத்தவும், உயர்வகை மரக்கன்றுகளை கிராமங்கள் தோறும் நடுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த காய்கறித்தோட்டத்தில் அப்பகுதி பொதுமக்களும் நேரடியாக காய்கறிகளை வாங்கி செல்கின்றனர்.

இதுபற்றி ஊராட்சி தலைவர் இளவேணி கூறியதாவது:
ஊராட்சி மக்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்த என்ன மாதிரியான திட்டத்தை செயல்படுத்தலாம் என நான் பொறுப்பேற்றவுடன் துணைத்தலைவர் உள்ளிட்ட வார்டு கவுன்சிலர்கள் கலந்தாலோசித்தோம். அப்போது உருவானதுதான் இந்த பொது காய்கறித்தோட்டம். இதற்காக தரிசாகவும், காடுகளாக வும் மண்டிக்கிடந்த ஊராட்சிக்கு சொந்தமான இடத்தை தேர்வு செய்து இந்த காய்கறி தோட்டத்தை அமைத்துள்ளோம். பொதுமக்களின் நலனை பாதுகாப்பதற்காக ரசாயன கலப்பில்லாமல் இயற்கை உரங்களை பயன்படுத்தி காய்கறித்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் நேரடியாக வாங்கி பயன்பெறுகிற விதத்தில் இந்த காய்கறித் தோட்டத்தை விரிவுபடுத்த திட்டம் உள்ளது. காய்கறித்தோட்டத்தை ஊராட்சித் துணைத் தலைவர் செல்வ ராஜ் மேற்பார்வையில் இரண்டு ஊழியர்கள் தின மும் பராமரிப்பு பணியை செய்து வருகின்றனர்.

மேலும் விவசாயிகள் கமிட்டி ஒன்றை அமைத்து அவர்களையும் தங்களது இடங்களில் காய்கறி சாகுபடி செய்யும்படி ஊக்கப்படுத்தினோம். அதைத்தொடர்ந்து சின்னதுரை என்ற விவசாயி தனது நிலத்தில் காய்கறி சாகுபடி செய்து தற்போது தஞ்சாவூருக்கு காய்கறிகளை விற்பனைக்கு தினமும் அனுப்பி வருகிறார். மேலும் பலர் இதுபோல் காய்கறி தோட்டம் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஊராட்சி சார்பிலான கூட்டங்கள் அனைத்தையும் இந்த தோட்டத்தில் வைத்துதான்

நடத்துகிறோம். கூட்டத்திற்கு வரும் பொதுமக்கள் இந்த காய்கறித்தோட்டத்தை பார்வையிட்டு நல்ல அறிவுரைகளை வழங்குகிறார்கள். இதன்மூலம் கிராம மக்களிடையே தோழமை உணர்வு ஏற்பட்டுள்ளதை காண முடிகிறது. இந்த காய்கறித்தோட்டத்தை பற்றிய தகவலறிந்த திருவாரூர் கலெக்டர் நடராஜன் நேரில் பார்வையிட்டு பாராட்டினார். நபார்டு வங்கி மூலம் காய்கறித் தோட்டத்தை விரிவுபடுத்த ஊராட்சிக்கு உதவ தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளனர். தோட்டக்கலை அதிகாரிகளும் பாராட்டு தெரிவித்துள்ளனர் என்றார்.

## கோம்பை பகுதியில் கொட்டியது மழை தக்காளி விவசாயிகள் மகிழ்ச்சி

தேவாரம்: கோம்பை பகுதியில் பெய்த மழையி னால் காட்டுத்தக்காளி பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கம்பம் பள்ளதாக்கு பகு தியில் இரண்டு வகையான தக்காளி விவசாயம் செய்யப்படுகிறது. ஆனைமலையன்பட்டி, சுருளிபட்டி, ராயப்பன்பட்டி, சின்னமனூர், உத்தமபாளையம் பகுதிகளில் தோட்ட கிணறுகளில் மின்மோட்டார் பொருத்தப்பட்டு தண்ணீரை எடுத்து நேரடியாக தக்காளி பயிரிடப்படுகிறது. இவ்வகையான விவசாயம் எப்படியும் விளையும் என்ற உறுதியுடன் விவசாயிகளால் செய்யப்படுகிறது.

கோம்பை, அனுமந்தன்பட்டி, தேவாரம் மலையடிவாரங்களை ஒட்டி உள்ள பலநூறு ஏக்கர் பரப்பில் செய்யப்படும் மானாவாரி தக்காளி விவசாயம் இயற்கையைச் சார்ந்தே செய்யப்படுகிறது. இங்கு தோட்டக்கிணறுகளோ, நீர்வள ஆதாரங்களோ இல்லை. மழை பெய்தால் தங்களது நிலங்களில் தக்காளியை விதைப்பார்கள். தொடர்ந்து மழை கிடைத்தால் அவை விளையும். மழை பெய்யாவிட்டால் தக்காளி செடிகள் கருகும். இதேபோல் கடந்த மாதம் பெய்த மழையை நம்பி மலையடிவாரத்தில் தக்காளி பயிரிடப்பட்டது. தற்போது பெய்த மழையினால் அவை விளைந்துள்ளன. அதே நேரத்தில் கடந்த இரண்டு நாட்களாக கோம்பை பகுதியில் பெய்த மழை தக்காளி விவசாயத்திற்கு கைகொடுத்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சிஅடைந்துள்ளனர். தொடர்ந்து ஈரப்பதம் இருக்குமானால் தக்காளி பயிர்கள் நன்கு விளைந்து மேலும் பயன்கொடுக்கும் என்று விவசாயிகள் நம்பிக்கையுடன் உள்ளனர். இதுகுறித்து விவசாயி வடிவேலு கூறுகையில், கோம்பை பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையினால் தக்காளி விவசாயம் மட்டுமின்றி, எள், தட்டை, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களுக்கும் பயன்கிடைக்கும். மண்ணில் ஈரப்பதம் நன்கு கிடைத்தால் அடுத்தடுத்து பயிர்களை விதைப்பதற்கு நன்றாக இருக்கும். அதேநேரத்தில் தற்போதைய மழையினால்

இப்பகுதியில் உள்ள நீர்வள ஆதாரங்களாக உள்ள குளங்கள் மற்றும் கண்மாய்களுக்கு எந்த விதமான நீர்வரத்தும் இல்லை. இது கவலையளிக்ககூடியதாக உள்ளதுÕ என்றார்.

### ராஜபாளையம் விவசாயிகளுக்கு அழைப்பு திருந்திய நெல் சாகுபடி முகாம்

ராஜபாளையம்: ராஜபாளையம் வட்டாரத்தில் அனைத்து வருவாய் கிராமங்களிலும் திருந்திய நெல் சாகுபடி மற்றும் திருந்திய பயறுவகை சாகுபடி குறித்த விழிப்புணர்வு முகாம்கள், வருகிற 30ம் தேதி வரை நடைபெறும் என வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியதாவது: 2013-14ம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பம் அமல்படுத்தப்படுகிறது. இதன்படி தரமான சான்று விதைகள் பயன்படுத்துதல், பூஞ்சாண விதை நேர்த்தி செய்தல், உயிர் உர நேர்த்தி செய்தல், மேட்டுப்பாத்தி நாற்றங் கால் அமைத் தல், இளம் வயது நாற்று நடவு, மார்க்கர் கருவி மூலம் நடவு, குத்துக்கு ஒரு நாற்று நடவு, நீர்மறைய நீர் உபயோகித்தல், இலை வண்ண அட்டையினை பயன்படுத்தி தழைச்சத்து உரமிடல் போன்ற தொழில் நுட்பங்களை கடைப்பிடிக்க அனைத்து விவசாயிகளும் முன்வர வேண்டும்.

முன்பருவ விழிப்புணர்வு முகாமில் திருந்திய பயறுவகை சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்படும். எனவே ராஜபாளையம் வட்டார விவசாயிகள், தங்களது வருவாய் கிராமங்களில் நடைபெறும் முன்பருவ விழிப்புணர்வு முகாமில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.

முகாம் நடக்கும் கிராமம், தேதி, நேரம் பற்றிய விவரங்களை அந்தந்த உதவி வேளாண்மை அலுவலர்கள், வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்புகொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பரமத்தி வேலூர் சந்தையில் வாழைத்தார் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

பரமத்திவேலூர்: பரமத்தி வேலூரில் வாழைத்தார் விலை உயர்வால் விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா ஜேடர்பாளையம், பாண்டமங்கலம், பரமத்தி வேலூர், நல்லூர், பொத்தனூர், பொத்தனூர்,

நன்செய் இடையாறு, குப்புச்சிபாளையம், பாலப்பட்டி, மோகனூர், ஒருவந்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பூவன், பச்சைநாடன், கபூரவள்ளி, மொந்தன், ரஸ்தாளி, உள்ளிட்ட பல்வேறு ரக வாழை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

இதேபோல் இங்கு விளையும் வாழைத்தார்களை விவசாயிகள் வேலூரில் செயல்பட்டு வரும் தினசரி சந்தைக்கு ஏலத்திற்கு கொண்டு வருகின்றனர். இங்கு ஏலம் எடுப்பதற்காக கரூர், திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் வந்திரந்து ஏலம் எடுக்கின்றனர். அவர்கள் இங்கிருந்து கர்னாடகா, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சென்னை, பெங்களூரு உள்ளிட்ட பெரு நகரங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த வாரம் நடைபெற்ற வாழைத்தார் ஏலத்தில் பூவன்தார் ஞ்டி 450க்கும், பச்சை நாடன் ஞ்டி 500க்கும், மொந்தன் ஞ்டி 600க்கும், கற்பூர வள்ளி ஞ்டி 400க்கும், ரஸ்தாளி ஞ்டி 400க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில் பூவன்தார் ஞ்டி 500க்கும், பச்சை நாடன் ஞ்டி 600க்கும், மொந்தன் ஞ்டி 700க்கும், கற்பூர வள்ளி ஞ்டி 500க்கும், ரஸ்தாளி ஞ்டி 500க்கும் ஏலம் போனது.

இதில் கடந்த வார விலையை ஒப்பிடுகையில் வாழைத்தார் விலை ஞ்டி50 முதல் ஞ்டி 100வரை

அதிகரித்துள்ளது. உற்பத்தி குறைந்துள்ள நிலையில் தேவை அதிகரித்துள்ளதால் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. மேலும் வரும் நாட்களில் சதுர்த்தி திருவிழா வர உள்ளதால் விலை மேலும் அதிகரிக்க கூடும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். வாழைத்தார் விலை உயர் வால் விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வாத்து விற்பனை ஜோர்

பரமத்திவேலூர், : பரமத்தி வேலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் வாத்து விற்பனை சூடு பிடித்துள்ளது.

பரமத்திவேலூர் சுற்றுவட்டார பகுதிகளில் கோழி கறிக்கு அடுத்தபடியாக வாத்துக்கறி விரும்பி உண்ணப்படுகிறது. இதனால் ஆந்திர மாநிலம் நெல்லூர், தமிழகத்தில் தஞ்சை, அரியலூர், சென்னை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வாத்து கூட்டத்தை வாங்கி வந்து

காவிரி கரையோர பகுதிகளில் நீர் நிலைகளில் மேயவிட்ட அவ்வப்போது விற்பனை செய்கின்றனர். இதில் வாத்தின் வளர்ச்சிக்கு எறு விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதனால் காவிரி கரையோரம் உள்ள பரமத்தி வேலூரில் வாத்து வளர்ப்பு தொழில் மற்றும் வாத்து வாத்துகறி விற்பனை பிரபலமாக உள்ளது. இதனால் வாத்து கறி விற்பனை சூடு பிடித்துள்ளது. வாத்து கறி வாங்குவதற்காக சுற்றுவட்டார பகுதி மக்கள் மட்டுமின்றி நாமக்கல்லில் இருந்து வந்தும் வாங்கி செல்கின்றனர். தற்போது வாத்துகள் வரத்து குறைவால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். கடந்த வாரத்தில் பெண் வாத்து ஒன்று கி 180க்கு விற்கப்பட்டது. நேற்று கி210 ஆக விலை உயர்ந்தது. அதே போல் ஆண் வாத்து கி 190க்கு விற்பனையானது. வாத்து வரத்து குறைவால் விலை உயர்ந்து காணப்படுகிறது.

## கவுந்தப்பாடி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கவில்லை

ஈரோடு, : கவுந்தப்பாடி மற்றும் புதுக்காடு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவித்துள்ளனர். பவானி வட்டத்திற்கு உட்பட்ட கவுந்தப்பாடி கிராமம் மற்றும் புதுக்காடு உள்ளிட்ட கிராமங்களில் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர்.

இந்த இரண்டு கிராமங்களும் கீழ்பவானி பாசனம் பெற்று வருகின்றன. கடந்த ஆண்டு பவானிசாகர் அணையில் தண்ணீர் குறைவாக இருந்ததால் பாசனத்திற்கு திறக்கப்படவில்லை. இதனால் தென்னை, வாழை, மஞ்சள், கரும்பு உள்ளிட்டவை காய்ந்து போனது.

தமிழக அரசின் சார்பில் சென்னை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களும் வறட்சி நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே கவுந்தப்பாடி மற்றும் புதுக்காடு உள்ளிட்ட கிராமங்களுக்கு இது வரை எவ்வித வறட்சி நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் குற்றம்சாட்டி உள்ளனர். மேலும் வருவாய்துறையில் வறட்சி நிவாரண பயணிகள் பட்டியல் கூட தயாரிக்காமல் உள்ளதாகவும் குற்றம்சாட்டும் விவசாயிகள் பாகுபாடின்றி அனைத்து கிராமங்களுக்கும் உண்மையான விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடி‘கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

### மீண்டும் தொடர்மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

ஊட்டி: நீலகிரியில் கடந்த சில நாட்களாக வெயில் அடித்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை முதல் மீண்டும் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு இடியுடன் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
ஆண்டுதோறும் நீலகிரியில் மே இறுதி வாரத்தில் பருவமழை துவங்கி நவம்பர் மாதம் வரை இடை விடாமல் பெய்வது வழக்கம். ஆனால் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்தது.

இதனால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். அதுமட்டுமின்றி, மின் உற்பத்திக்காக பயன்பட்டு வரும் அப்பர்பவானி, அவலாஞ்சி, பார்சன்ஸ்வேலி, போர்த்திமந்து, பைக்காரா உட்பட 14 அணைகளில் நீர்மட்டம் நாளுக்குநாள் குறையத் துவங்கியது. மேலும், ஊட்டி நகராட்சி உட்பட்ட அணைகளில் நீரின் அளவு குறைந்தது. இதனால் குடிநீர் பிரச்னை ஏற்பட்டு பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகியிருந்தனர். மின் உற்பத்தி பாதிக்கும் நிலையும் இருந்தது.
இந்நிலையில், கடந்த ஜூன் மாதம் துவங்கிய மழை 2மாதமாக ஊட்டி, கூடலூர், குந்தா மற்றும் பந்தலூர் பகுதிகளில் மழை கொட்டித் தீர்த்தது. மேலும் எந்நேரமும் மேக மூட்டமும், காற்றுடன் கூடியசாரல் மழையும் பெய்துவந்தது.

கூடலூர், தேவாலா, அப்பர்பவானி, அவலாஞ்சி போன்ற நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது. நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்த நிலையில் அப்பர்பவானி, அவலாஞ்சி, பைக்காரா போன்று மின் உற்பத்திக்கு பயன்படும் அணைகள் நிரம்பி வழிந்தன. மேலும் ஊட்டி நகராட்சிக்குட்பட்ட அணைகளில் பார்சன்ஸ்வேலி அணையின் நீர்மட்டம் உயர்ந்தது. மேலும் சில அணைகளில் கணிசமாக தண்ணீர் அளவு உயர்ந்தது.

தொடர்மழையால் தேயிலை, மலைகாய்கறி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துனர். குறித்த நேரத்தில் இம்முறை பருவமழை துவங்கியதால், காய்கறி விவசாயம் மேற்கொள்ள துவங்கினர். கடந்த இரு ஆண்டுகளாக காய்ந்து போய் தரிசு நிலமாக கிடந்த விவசாய நிலங்களில் கூட பயிர் செய்ய துவங்கினர்.

கடந்த மாதம் துவக்கம் முதல் மழை சற்று குறைந்து வெயில் அடித்து வந்தது. இது காய்கறி

மற்றும் தேயிலை தோட்டங்களுக்கு உரமிடவும், களைகளை அகற்றவும் ஏற்றதாக இருந்தது. தற்போது மீண்டும் கன மழை பெய்யத் துவங்கியுள்ளது. கடந்த மூன்று நாட்களாக பகல் நேரங்களில் கன மழை பெய்கிறது. அணைகளில் நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### அரசு கூட்டுறவு ஏல மையத்தில் 86 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர்: குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 36வது ஏலம் நேற்று நடந்தது. இதில் மொத்தம் 3 லட்சத்து 95 ஆயிரத்து 834 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலை ரகம் 2 லட்சத்து 21 ஆயிரத்து 186 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து 74 ஆயிரத்து 648 கிலோவும் அடங்கும். ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகளவில் இருந்ததால் 86 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.5 வரை விலை உயர்ந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.75 முதல் ரூ.80, உயர்வகை ரூ.110 முதல் ரூ.120, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.80 முதல் ரூ.85, உயர் வகை ரூ.110 முதல் ரூ.115 வரையிலும் விலை கிடைத்தது. கடந்த ஏலங்களை காட்டிலும் இந்த ஏலத்தில் தேயிலை தூள் விற்பனை அதிகரித்ததுடன் அதன் விலையும் உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த ஏலத்தில் 3 லட்சத்து 40 ஆயிரத்து 195 கிலோ தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் ரூ.3 கோடியே 60 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஊட்டி தாவரவியல் பூங்காவில் ஐரோப்பா மலர்கள் மட்டுமே பூத்தன

ஊட்டி:அரசு தாவரவியல் பூங்காவில் ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் 'டபுள் அகேலியா' மலர்ச்செடிகள் முதன் முறையாக நடவு செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது இம்மலர்கள் பூத்துள்ளதால் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து வருகின்றனர். ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் பல்வேறு வகை மலர்ச்செடிகள், மரங்கள், பெரணி வகைகள் உள்ளன. இதே போல் பல்வேறு பாலைவான கள்ளிச்செடிகளும் வளர்க்கப்படுகிறது. இதுதவிர மூலிகை செடி உள்ளது. மேலும் இத்தாலியன் பூங்கா அருகே 1 ஏக்கர் பரப்பளவில் ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் டபுள் அகேலியா

எனும், கொத்து கொத்தாக பூக்கும் அகேலியா மலர்ச்செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன. முதன்முறையாக மாவட்டத்தில் உள்ள அரசு தாவரவியல் பூங்காவில் இந்த மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது. சுமார் ஒரு ஏக்கர் பரபரப்பளவில் 1,250 மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது இச்செடிகளில் மலர்கள் பூத்துக்குலுங்கியுள்ளன. இரண்டாம் சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகள் இந்த மலர்களை கண்டு ரசிக்கின்றனர். பூங்கா முழுவதிலும் உள்ள மலர் செடிகளில் மலர்கள் பூக்காத நிலையில், தற்போது இச்செடிகளில் மட்டுமே மலர்கள் பூத்துள்ளது

## மண் அரிப்பை தடுக்க வெட்டிவேர் செடி நட வேண்டும்

குன்னூர், : மண் அரிப்பை தடுக்க வெட்டிவேர் செடிகள் நடவு செய்ய வேண்டுமென புவியியல் துறை அறிவுறுத்தியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் பருவமழையின் போது பல்வேறு பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. கடந்த 2006, 2009 ஆகிய ஆண்டுகளில் பேரிடர் ஏற்பட்டு 50க்கு மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 2 ஆயிரம் வீடுகளும் சேதமடைந்தது. இதை தொடர்ந்து மத்திய சுரங்க புவியியல் துறை நிபுணர்கள் குழுவினர் நிலச்சரிவு மற்றும் மண் சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகளில் ஆய்வு செய்தனர். அதன்படி பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பரிந்துரை செய்தனர். இதுவரை புவியியல் துறையினுடைய பரிந்துரை பின்பற்றப்படவில்லை. விதிமீறி கட்டுமான பணிகளும் ஜேசிபி எந்திர பயன்பாடு மற்றும் ஆழதுளை கிணறு வெட்டுதல், பாறைகளை வெடி வைத்து அகற்றுதல் மழையை குடைந்து சாலை அமைத்தல் போன்ற பணி தொடர்கிறது. இந்நிலையில், வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் இதுதொடர்பாக மீண்டும் ஆய்வு செய்து தற்போது நிலை குறித்து தெரிந்து கொள்ள ஏதுவாக புவியியல் துறை நிபுணர் குழுவினர் குன்னூர், கோத்தகிரி, ஊட்டி, குந்தா ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்து வருகின்றனர். பெரும்பாலான இடங்களில் மண் அரிப்பு மற்றும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ள பகுதிகளில் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக வெட்டி வேர்களை நடவு செய்ய வேண்டுமென நிபுணர் குழு வலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து புவியியல் துறை நிபுணர் குழுவினர் கூறுகையில், 'மலை சரிவு, செங்குத்தான இடங்கள், சாலையோர மண் திட்டுகள் ஆகியவற்றில் மண்ணை கெட்டியாக பிடிக்க ஏதும் இல்லாததால் மண் சரிவு ஏற்பட்டு வருகிறது. இதனை தடுக்க வெட்டிவேர்களை நடவு

செய்யும் பட்சத்தில் இதன் வேர் பூமிக்கடியில் நீண்ட தூரம் சென்று மண்ணை இறுக்கி பிடித்து கொள் வதால் மண் அரிப்பையும், மண் சரிவையும் தடுக்க இயலும். எனவே மலை மாவட்டத்தில் வெட்டி வேர்களை தேவையான இடங்களில் நடவு செய்து மண் அரிப்பை தவிர்க்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்' என்றனர்.

## தஞ்சையில் நடப்பாண்டு உணவு தானிய உற்பத்தி இலக்கு 7 லட்சம் டன் கூட்டத்தில் தகவல்

தஞ்சை: தஞ்சை மாவட்டத்தில் நடப்பாண்டு உணவு தானிய உற்பத்தி இலக்கு 7 லட்சம் டன் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார். தஞ்சை கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் வேளாண் துறை சார்பில் உணவு தானிய இயக்கம் தொடர்பாக விவசாயிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்ட மாவட்ட அளவிலான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

கலெக்டர் பாஸ்கரன் தலைமை வகித்து பேசியதாவது:

தஞ்சை மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியை இருமடங்கு அதிகரிக்கவும், மும்மடங்கு லாபம் பெறவும், தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், உற்பத்தித்திறனை அதிகரித்து விவசாயிகளுக்கு சந்தை நிலவரம் குறித்த ஆலோசனைகள் வழங்குதல், திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளுதல், பயிர்க்கடன் மற்றும் அரசு மானியம் உள்ளிட்ட பல் வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் நடப்பாண்டு உணவு தானிய உற்பத்தி இலக்கு நெல் 7.075 லட்சம் டன், சிறு தானியங்கள் .099 லட்சம் டன், பயிறு வகைகள் .289 லட்சம் டன் என மொத்தம் 7.463 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகள், கிராம, வட்டார, மாவட்ட அளவில் உணவு தானிய செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள், வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விவசாயிகளை ஒருங்கிணைத்து பயிர்த்திட்டம் தயாரித்தல், நெல், சிறு தானியங்கள் மற்றும் பயிறு வகைகளுக்கான இயக்க திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலமாக உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது உணவு தானிய இயக்கத்தின்

நோக்கமாகும். விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வேளாண் நலத்திட்டங்கள் மற்றும் நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்த அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். டிஆர்ஓ சுரேஷ்குமார், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ராஜேந்திரன், வேளாண் இணை இயக்குனர் சேகர், வேளாண் துணை இயக்குனர்கள் ராமதாஸ், சீனிவாசன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் வேலாயுதம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் சொக்கலிங்கம் (வேளாண்மை), தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் செல்வராஜ், பொதுப்பணித்தறை செயற்பொறியாளர் (நீர்வளம் ஆதாரம்) கலைச்செல்வன், விதைச்சான்று உதவி இயக்குனர் பாண்டியராஜன், முன்னோடி விவசாயிகள் வீரமணி, அய்யாதுரை, செல்வராஜ், அய்யாராஜ், அர்ஜூனன், ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மண்வளம் பாதுகாக்க தென்னைநார் கழிவுகளை உரமாக பயன்படுத்த வேண்டும் வேளாண் துறை ஆலோசனை

ராமநாதபுரம்: மண் வளம் பாதுகாக்க தென்னை நார் கழிவுகளை உரமாக பயன்படுத்த வேண்டும் என வேளாண் அறிவியல் பேராசிரியர் துரைசிங் தெரிவித்தார். தென்னைநார் கழிவில் இருந்து இயற்கை உரம் தயாரிப்பது குறித்து திருப்புல்லாணி அருகே தினைக்குளம் கிராமத்தில் செயல்விளக்கம் நடந்தது. உதவி பேராசிரியர் மீனாட்சி, முனைவர் ஆனந்த் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் துரைசிங் பேசியதா வது: ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 26 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல், 26 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மிளகாய், 8 ஆயிரம் ஹெக் டேரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இயற்கை கழிவு பொருட்களை மீண் டும் மண்ணில் சேர்ப்பதால் மண்ணின் தன்மை மேம் பட்டு, விவசாயத்திற்கு உதவும்.

விதைப்புக்கு முன்னர் இயற்கை உரங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். தென்னை நார் கழிவுகளில் இருந்து நல்ல உரம் தயாரிக்கலாம். நார் கழிவுகள் பிற மாவட்டங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. தென்னை நார்

பிரித்து எடுக்கும்போது கிடைக்கும் கழிவுகளில் அதிக விகிதத் தில் கரிமம் மற்றும் தழை சத்துக்கள் உள்ளன. எனவே தென்னை நார் கழிவுகளை நேரடியாக உரமாக பயன்படுத்த முடி யாது. இவற்றை எளிய முறையில் மட்க வைத்து உரமாக பயன்படுத்தலாம்.

ஒரு டன் நார் கழிவினை மட்க வைக்க 1.5 கிலோ ப்ளியூரோட்டஸ் பூஞ்சை மற்றம் 5 கிலோ யூரியா தேவைப்படும். ஒரு டன் நார் கழிவுகளை 4 அடி நீளம் 3 அடி அகலத்தில் பரப்பி லேசாக தண்ணீர் தெளிக்க வேண்டும்.

இந்த அடுக்கு மீது ஒரு கிலோ யூரியா தூவ வேண் டும். இதன் மீது மீண்டும் 100 கிலோ நார் கழிவுகளை பரப்பி ப்ளியூரோட்டஸ் பூஞ்சை 300 கிராம் தூவ வேண்டும். இவ்வாறு 1 டன் நார் கழிவுகளை யூரியா, ப்ளியூரோட்டஸ் என்று மாற்றி, மாற்றி 10 அடுக்குகளாக அமைக்க வேண்டும். அடுக்குகளுக்கு தினமும் தண்ணீர் தெளிக்க வேண் டும். 15 நாட்களுக்கு ஒரு முறை இதனை கிளறிவிட வேண்டும். 60 நாட்களுக்கு பிறகு இது மட்கி, லேசான கருமை நிறமாக உரமாக மாறி விடும்.
இந்த உரத்தை ஹெக்டேருக்கு 5 டன் என்ற அள வில் பயிர்களுக்கு பயன்படுத்தலாம். இது மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை, ஈரத்தன் மையை அதிகரிக்க செய் யும். இதன் மூலம் மண்வளம் பாதுகாக்கப்படும். இவ் வாறு அவர் தெரிவித்தார்.

## செப்.15 முதல் நெல் விதைப்பு பணி துவக்கம் 3,116 மெட்ரிக் டன் உரம் இருப்பு வைக்க நடவடிக்கை

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் செப்டம்பர் 15 முதல் நெல் விதைப்பு பணி துவங்க உள்ளது. இதனால் இம்மாதம் 3 ஆயிரத்து 116 மெட்ரிக் டன் உரம் இருப்பு வைக்க வேளாண் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்த சாகுபடி பரப்பில் 70 சதவீதம் நெற்பயிர் சாகுபடி

செய்யப்படுகிறது. 1.30 லட்சம் ஹெக்டேர் பரப்பில், 74 ஆயிரம் ஹெக்டேரில் வடகிழக்கு பருவ மழையை எதிர்பார்த்து செப்.15 முதல் விதைப்பு பணி துவங்க உள்ளது. மாவட்டத்தில் இந்த ஆண்டு 45 ஆயிரத்து 520 மெட்ரிக் டன் உரம் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் கூட்டுறவு சங்கங்களின் மூலம் 8 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா, டிஏபி 2 ஆயிரத்து 800 மெட்ரிக் டன், பொட்டாஷ் 200 மெட்ரிக் டன், கலப்பு உரங்கள் 4 ஆயிரம் மெட்ரிக் டன் என மொத்தம் 15 ஆயிரம் மெட்ரிக் டன்னும், உரிமம் பெற்ற தனியார் உர விற்பனையாளர்கள் மூலம் 35 ஆயிரத்து 520 மெட்ரிக் டன்னும் உர விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மாதந்தோறும் தேவைக்கு ஏற்ப உரம் இருப்பு வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கலெக்டரின் உத்தரவுப்படி வேளாண்மைத்துறை, கூட்டுறவுத்துறை, டான்பெட் ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து, மாவட்டத்திலுள்ள 131 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலும் உரங்கள் இருப்பு வைக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இம்மாதம் 3 ஆயிரத்து 116 மெட்ரிக் டன் உரம் இருப்பு வைக்க வேளாண் துறை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். இந்த மாதம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஆயிரத்து 148 மெட்ரிக் டன் உரங்களும், தனியார் உர விற்பனை கடைகளில் ஆயிரத்து 968 மெட்ரிக் டன் உரங்களும் இருப்பு உள்ளன. எனவே விவசாயிகள் வேளாண் அலுவலர்களின் அறிவுரைப்படியும் அல்லது மண் பரிசோதனை ஆய்வு முடிவுகளின்படியும் உரங்கள் இட கேட்டுக் கொள்ளப்படுகிறது. தனியார் உர விற்பனையாளர்கள் கடைகளில் இருப்பு விபரத்தை தகவல் பலகையில் விவசாயிகளுக்கு தெரியும் வண்ணம் எழுதி வைக்க வேண்டும். விற்கும் உரங்களுக்கு ரசீது வழங்க வேண்டும். உரக்கட்டுப்பாட்டு சட்டத்தை மீறும் தனியார் உர விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்(பொ) சவுந்தரராஜன், தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குநர் சேக்அப்துல்லா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.